விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 31 ஜுல்ஹஜ் 27 இதழ் 186
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15-8-1985

## 'வன்முறைகள் மேலும் வன்முறைகளையேபெருக்கும்'

### இந்திய உயர் ஸ்தானிகரின் சுதந்திரதினச் செய்தி

(கொழும்பு)

''வன்முறைகள் மேலும் வன்முறைகளுக்கே இட்டுச் செல்லும் என்பதை இலங்கையுடன் இந்தியாவும் புரிந்து கொள்கிறது'' என்று இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என் டிக்ஸிற் இந்தியாவின் 38-வது சுதந்திரதின நிறைவை யொட்டி விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. டிக்ஸிற் அச்செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது: ''இந்தியாவும் இலங்கையும் தமது தற்போதைய பிரச்னைகளை இராணுவ நடவடிக்கைகளால் தீர்க்க முடியாது. அப்படித் தீர்க்க முயலுவது எரியும் நெருப்பில் எண்ணையை ஊற்றுவது போலாகும் எனவே இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு மிகவும் உயர்ந்த நோக்குத் தேவைப்படுகிறது.

(11-ம் பக்கம் பார்க்க)



# பேச்சுக்களில் முட்டுக்கட்டை! ரொமேஷ் பண்டாரி இன்று திம்பு விரைகிறார்!

## ஓய்வூதியம் இல்லை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலுள்ள மக்கள்வங்கிக் கிளை மூடப்பட்டிருப்பதால், இன்று காங்கேசன்துறை ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படமாட்டா தென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று சுழிபுரம், சாவகச்சேரி, பருத்தித்துறை பகுதியினருக்கு ஏற்கனவே அறிவித்தபடி ஓய்வூதியம் வழங்கப்படும் (௯)

## வடக்கு-கிழக்கு இணைப்பு வலியுறுத்தப்பட்டது!

(புதுடில்லி)

திம்பு பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்க, இந்திய வெளியுறவுச்செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி இன்று அவசரமாக பூட்டான் தலைநகர் திம்பு விரைகிறார்.

பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு நேற்று விடுக்கப்பட்ட அவசரக் கோரிக்கையைத் தொடர்ந்தே திரு. ரொமேஷ் பண்டாரியை பிரதமர் ராஜீவ் காந்தி இன்று திம்புவுக்கு அனுப்பிவைக்கிறார்.

இலங்கை இனப்பிரச்னை தொடர்பான இரண்டாவது சுற்று 'திம்பு' பேச்சுவார்த்தை கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது தெரிந்ததே.

முதல் நாள் இரண்டு மணி நேரமும் செவ்வாய்க்கிழமை மூன்று மணி நேரமும் பேச்சுக்கள் நடைபெற்றன

நேற்றைய பேச்சுவார்த்தை சற்றுக் 'காரமாக' இருந்ததாகத் தெரியவருகிறது

நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பு, சுயநிர்ணய உரிமை பற்றி அதிக நேரம் விவாதிக்கப்பட்டதாக அறியப்படுகிறது

மகாநாட்டில் கலந்து கொண்ட தமிழ்ப்போராளிகள் பிரதிநிதிகளும், தமிழர் விடுதலை கூட்டணியினரும் வடக்கு-கிழக்கு இணைப்பை கடுமையாக வற்புறுத்தி, தமிழ்மக்களின் சுய நிர்ணய உரிமை பற்றி வலியுறுத்தியதாகத் தெரிய வருகிறது.

இதனைத் தொடர்ந்தே பேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்பட்டதாக அறியப்படுகிறது.

நேற்றைய பேச்சுக்களில் ஏற்பட்ட திடீர் முட்டுக்கட்டை பற்றி இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்திக்குத் தெரிவிக்கப்பட்டது.

(11-ம் பக்கம் பார்க்க)

## அமைதி, சமாதானம்வேண்டி 17 5552 பேர்'ரெலக்ஸ்'செய்தி 'திம்பு' மாநாடு பிரதிநிதிகளுக்கு அனுப்பப்பட்டது!

(கொழும்பு)

நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவவேண்டும் என்று தெரிவித்து 17,552 பேர்ன் கையெழுத்துடன், ஐக்கிய சர்வமத இயக்கத்தினர் திம்பு பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் பிரதிநிதிகளுக்கு 'ரெலக்ஸ்' மூலம் செய்தியொன்றை அனுப்பிவைத்

(11-ம் பக்கம் பார்க்க)

## 35 மீனவர்களையும் விடுவிக்குமாறு அமைச்சர் கோரிக்கை

(கொழும்பு)

''35 கடற்றொழிலாளர்களை கடத்திச் சென்றவர்கள், அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்ற 11-ம் திகதி இந்த

(11-ம் பக்கம் பார்க்க)

## சுவிஸிலிருந்து தமிழர்கள் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்

### சுவிஸ் பத்திரிகையாளர் கருத்து

(யாழ்ப்பாணம்)

''சுவிற்சர்லாந்தில் அகதிகளாகத் தங்கியிருக்கும் இலங்கைத்தமிழர்கள் எவரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள். அதே நேரத்தில் அங்கு தங்கியிருக்கும் இலங்கைத்தமிழர்களுக்கு பூரண விசாரணையின்றி அரசியல் அந்தஸ்து வழங்கப்படமாட்டாது''

இவ்வாறு, யாழ்ப்பாணம் வந்திருந்த சுவிற்சர்லாந்து பத்திரிகையாளர் திரு றிச்சார்ட் கிறீன் போர்க் தெரிவித்தார்

இரண்டு நாள் யாழ்ப்பாண விஜயத்தின் போது 'ஈழநாடு' அலுவலகத்துக்கு வந்திருந்த அவர், சுவிற்சர்லாந்தில் சுமார் இரண்டாயிரம் தமிழர்கள் இருப்பதாகக் குறிப்பிட்டு அவர்கள் தாங்களாகவே

(11-ம் பக்கம் பார்க்க)

## ● யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் மறியல்போராட்டம்!

(எம் ரி சந்திரகுமார்)

யாழ். பல்கலைக்கழக 2ம்வருட கலைப்பீட மாணவர்கள் நேற்று பல்கலைக்கழக வளவினுள் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினார்கள்!

மாணவர்கள் சில காரணங்களைக் குறிப்பிட்டு, தமக்கு இம்மாதம் 30ம் திகதி நடைபெறவிருக்கும் கலைப்பீடப் பரீட்சையை இருவார காலத்துக்கு ஒத்திவைக்குமாறு நிர்வாகத்தைக் கேட்டுக்கொண்டதாகவும் இந்தக்கோரிக்கையை நிர்வாகம் நிராகரித்த காரணத்தினாலேயே தாம் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தமது கோரிக்கைக்குச்சாதகமான தீர்வு கிடைக்கும்வரை தாம் தொடர்ந்தும் மறியல் போராட்டம் நடத்தவிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## ஆங்கிலப்பரீட்சை ரத்து!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் புதிய மாணவர்களுக்கு நேற்று நடைபெறவிருந்த ஆங்கிலப் பரீட்சைகள் யாவும் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சை பின்னர் எப்பொழுது நடைபெறும் என்பது பற்றி அது மாணவர்களுக்கு பத்திரிகைகள் மூலம் பின்பு அறிவிக்கப்படும் என்று துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தெரிவித்தார்.

அதேநேரத்தில் யாழ். பல்

(11-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலிருந்து திருமலை வந்த 'மினிவான்' தாக்கப்பட்டு 6 பேர் பலி! பலர் படுகாயம்!

(திருக்கோணமலை)

திருக்கோணமலைப் பகுதியில் மினிவான் ஒன்று நேற்றுமுன் தினம் தாக்கப்பட்டதால் அந்த மினிவானில் பயணம் செய்த 6 பேர் பலியானதாக உத்தியோக பூர்வமற்ற செய்தியொன்று தெரிவிக்கிறது

கொழும்பிலிருந்து திருமலை வரும் வழியில் கந்தளாயில் வைத்து இந்த மினிவான்

(12ம் பக்கம் பார்க்க)

## மதவாச்சியில் 2 பஸ்கள் கடத்தப்பட்டன

(வவனியா)

மதவாச்சியில் பிரயாணிகளுடன் இரு பஸ்கள் நேற்று முன்தினம் இனந்தெரியாத இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்டது.

மதவாச்சி சந்தியில் இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படு

(12-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மினி சினிமாவுக்கு உரிய 45 பைப் கதிரைகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- செ. கோபாலு, மெயின்வீதி, சங்கானை. 57

## விற்பனைக்கு

ஏ.சி/டி.சி.வெல்டிங் இயந்திரம் (230/415 V - 200 Amps) துளையிடும் யந்திரம் (32/1'- 8/5''; 1/2 H. P) சாணை இயந்திரம் (¾ H. P.) பாதுகாப்பு மூடிகளுடன், லேத் பட்டறைக்குத் தேவையான உதிரிப் பாகங்கள், Honda H 100 S மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு தொடர்பு: S. சுந்தரேசன், கே. கே. எஸ். வீதிச் சந்தி, கோண்டாவில் மேற்கு. 25

## பெயர் மாற்ற அறிவித்தல்

தெல்லிப்பழை வறுத்தலைவிளானைச் சேர்ந்த. சிவரத்தினம் சுகிர்தராஜசிங்கம் ஆகியநான், எனது பெயரை இன்று முதல் சிவரத்தினம் சுகி என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகிறேன்.

(52) எஸ். சுகி

## மணப்பந்தல்

எம்மிடம் அநேக மணமக்கள் இருக்கின்றனர். விரைவில் நிறைவேற்றுவோம். நேரில் விஜயம் செய்யுங்கள். நம்பிக்கைக்கு உத்தரவாதம், ஸ்ரீமாலவ விநாயகர் மங்கல ஏஜன்ஸி, கொல்லங்கலட்டி தெல்லிப்பழை, கிளை: 52/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 62

## JAFFNA COLLEGE

### WANTED A LIBRARIAN

A graduate in Arts in the English medium of a recognised University, preferably with Library Science qualifications and experience. Should be prepared to reside in Vaddukoddai.

Apply stating qualifications and experience on or before 30th October, 1985.

PRINCIPAL.

Jaffna College,
Vaddukoddai. 59

## லொறி கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

இயக்கச்சியில் நேற்று முன்தினம் இனந்தெரியாத இளைஞர்களினால் கடத்தப்பட்டபின் லொறி சிலமணி நேரத்திற்கு திருப்பி சாரதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த லொறியைக் கடத்திச் சென்றவர்கள் சாமான்களை இறக்கி பார்த்தபின் சாமான்களுடன் லொறியை ஒப்படைத்தனராம்.

இந்த லொறியில் ஜவுளிகள் தளபாடங்கள் மற்றும் சில்லறை சாமான்கள் இருந்ததாக கூறப்படுகிறது.

இதே போன்று மற்றும் சில லொறிகள் கடத்தப்பட்டு சாமான்கள் சோதனையிட்டபின் திருப்பி ஒப்படைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. (க)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

செல்வன் செந்துராஜ்



தச்சந்தோப்பு ஆறுமுகசுவாமி - சகுந்தலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் செந்துராஜ் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (15-8-85) கல்முனையில் அன்பு அப்பா அம்மா, அண்ணன் சித்தப்பாவுடனும், நண்பர்களுடனும் மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார். செந்தனைசெல்வக்கந்தன் அருளோடு சகல செல்வங்களும், சகல கலைகளும் பெற்று நீடூழிகாலம் வாழ்க வென அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, அத்தைமார்கள், சித்தப்பா, பாரேன் சித்தப்பாமார், மாமா, கனடா மாமா, மல்லாகம் மாமா, மாமி, மச்சாள்மார், மச்சான்மார், பெரியம்மா, அண்ணன்மார், அக்காமார், மற்றும் உற்றார், உறவினர் அன்புடன் வாழ்த்துகின்றார்கள். 33

# N. C. E.

## EXAM. ON 15-2-86

பயிற்சி வகுப்புகள்

BY

## S. B. IYAR

| | | |
|---|---|---|
| ஆரம்பம் 19-8-85 | திங்கள் வெள்ளி | மாலை 3-00 — 5-00 — |
| 24-8-85 | சனி ஞாயிறு | மாலை 2-00 4-00 |

12, வைமன் வீதி, நல்லூர். (42)

## சிராத்த தினம்

### கணபதிச்சாமியார்

கோண்டாவில் மேற்கு



**தோற்றம்: 17-12-1901**

**மறைவு: 17-07-1985**

அன்னாரது சிராத்ததினம் நாளை வெள்ளிக்கிழமை (16-8-1985) அன்று அவரது இல்ல ஆலயத்தில் கொண்டாடப்பட இருக்கிறது. அவரது ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட உறவினர்கள், நண்பர்களுக்கு நன்றி கூறும் அதே வேளையில், நாளை நண்பகல் நடைபெறும் அவரது சிராத்ததினத்திலும், விசேட பூசையிலும் கலந்துகொண்டு சிறப்பிக்கும்வண்ணம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்!
சாமியார் குடும்பத்தினர்.

(23)

## காணவில்லை



மகன் கமலநாதன் 2-8-85 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணியிலிருந்து காணவில்லை. வயது 23, உயரம் 5 அடி 6 அங்குலம், பொதுநிறச் சிவப்பு, நடுத்தர உடற்கட்டுடையவர். விவேக புத்தியற்றவர், நீலக் கோட்டுச்சேட்டும், நீலச் செக்சாரமும் அணிந்திருந்தார். அவரது பிரிவினால் பெற்றோர், சகோதரர்கள் பெருந்துயரடைந்து தேடியலைகின்றார்கள். தயவுசெய்து அவரைக் கண்டவர்கள் கீழ்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தகவல்!
சி. சிவகுருநாதன்,
''சிவனிதான்'',
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(50)

## 31-ம் நாள் நினைவு அஞ்சலியும், சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் வேலுப்பிள்ளை சோமசுந்தரம்

(இளைப்பாறிய புகையிரத உத்தியோகத்தர், நீர்வேலி)

**மலர்வு: 31-1-1902 உதிர்வு: 16-7-1985**

அன்புடையீர்!

எனது அன்புத் தந்தை அவர்களது வீட்டுக்கிருத்தியம் 16-8-85 வெள்ளிக்கிழமை திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் உறவினர்கள், நண்பர்கள் சமுகமளித்து கிருத்திய வைபவத்தில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து மதிய போசனத்திலும் பங்குபற்றி ஏகுமாறு அன்புடன் வேண்டிக்கொள்ளுகின்றேன்

## V. S. சொக்கலிங்கம்

(இ. போ.ச. சாலை முகாமையாளர், கோண்டாவில்)

கடந்த 16-7-85ம் திகதி இடம்பெற்ற அன்னாரது இறுதிச் சடங்கில், எமது துயரில் பங்கு கொண்டு உதவி ஒத்தாசை புரிந்தவர்கட்கும், விசேடமாக வ. பி. போ. ச. ஊழியர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலை இத்தால் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கோ ஞவலை வீதி,
திருநெல்வேலி. (56)

## யாழ். மாநகராட்சி மன்றத்தின் முக்கிய அறிவித்தல்

இத்தால் சகல போக்குவரத்து வாகனங்களும் 20-8-85 அதிகாலை 12-01 மணியிலிருந்து 16-09-85 நள்ளிரவு 12-00 மணி வரைக்கும் கீழ் வரும் பாதைகள், தெருக்கள் நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவை முன்னிட்டு போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

01. அரசடிச் சந்திக்கும் 2-ம் கட்டை தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்.
02. பிராமணக் கட்டுக்குள சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோவில் வீதியின் அப்பாகம்.
03. செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித் தெருவின் அப்பாகம்.
04. பஸ்வண்டிகள், மினிபஸ்கள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி வழியாக கச்சேரி—நல்லூர் வீதிச் சந்தி வழியாக முத்திரைச் சந்தையடிச் சந்தியூடாகச் செல்லல்.
05. 2-ம் கட்டை குறுக்கு வீதியிலுள்ளவர்கள் மட்டுமே தமது வாகனங்களை அவ்வீதியில் பாவிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

எனவே சகல வாகன உரிமையாளர்களும் இவ்விடயத்தில் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றேன்.

சி. வீ. கே. சிவஞானம்,
ஆணையாளர்,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

13-08-1985 (53)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சிறுவிளான் சேனாதிராசா இம்மானுவேல் மேரி யோசேப் என்பவரின் மரணசாதனம் எழுதப்பட்ட சொத்துக்களின் விடயத்தில், மரியவாசா, இளவாலை.

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } ரி/ 66

மேரியோசேப் கைப்பெண்லூட்ஸ் மேரி திரேசா, மரியவாசா, இளவாலை.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும்1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 18ந் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்

1985-ம் ஆண்டு ஆவணி மாதம் 6-ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார்
சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

வரைவு:
மு யோககுமார்,
மனுதாரின் சட்டத்தரணி: 34

## வெள்ளையரல்லாதோர் மீதான நடவடிக்கைகளில்

# தீவிரமாற்றங்களைக் கொண்டுவர தென்னுபிரிக்க அரசாங்கம் முடிவு!

## கறுப்பர்களுக்கு எங்கும் நடமாட உரிமை; வெள்ளையர்களுக்கு தொழில் ஒதுக்கீடு இல்லை!!

பிறிட்டோரியா, ஆக-14

தென்னுபிரிக்க அரசாங்கம், கறுப்பினத்தவர் தொடர்பான அரசியல் நடவடிக்கைகளில் முக்கிய மாற்றங்களை மேற்கொள்ளவுள்ளது. இம்மாற்றங்கள் குறித்துத் தென்னுபிரிக்க அதிபர் திரு. பி. எம். போத்தா இன்னும் இரு தினங்களில் நாட்டு மக்களுக்கு விரிவான விளக்கமளிப்பார். புதிய மாற்றங்கள் வெள்ளையரல்லாத தென்னுபிரிக்க இனங்களுக்குக் கூடுதல் சலுகைகள், உரிமைகளைக் கொண்டதாக இருக்குமென்று அறியப்படுகின்றது.

தென்னுபிரிக்க அரசின் புதிய நடவடிக்கைகள் குறித்து இந் நாட்டின் இன விவகார அமைச்சர் டாக்டர் கறிற் பியூலியன் சுருக்கமான விளக்கமொன்றை அளித்தார். இவ்விளக்கம் திரு. போத்தாவின் பிரதான அறிவிப்புக்கு முன்னோடியானதாக அமைந்திருந்தது.

டாக்டர் பியூலியன் கொடுத்த விளக்கம் வருமாறு:-

"தென்னுபிரிக்க வெள்ளையர் இன ஆட்சியாளர்கள் எதிர்காலத்தில் தீவிரமான அரசியல், நிர்வாக மாற்றங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

இம்மாற்றங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும், தென்னுபிரிக்க அரசியலில் ஒரு திருப்பமாகவும் அமையும்.

தென்னுபிரிக்க வெள்ளையர் இன ஆட்சியாளர்கள் தமது சொந்த முடிவுகளையே இதுவரை காலமும் எடுத்துவந்தனர். அத்துடன் தம்மிடையிலேயே கருத்துப் பரிமாற்றங்களையும் மேற்கொண்டு வந்தனர்.

ஆனல் எதிர்காலத்தில் கலப்பினத்தவர், இந்தியர்கள் உட்படக் கறுப்பினத்தவருடன் அரசியல் தீர்மானங்கள், முடிவுகளை எடுப்பதில் அவர்கள் பங்காளர்களாகவே விளங்கமுடியும்

கறுப்பினத்தவர் மற்றும் குறைந்தளவு சலுகைகளைக் கொண்டுள்ள இனத்தவர்களைக் கட்டுப்படுத்தும் சட்ட மூலங்கள் படிப்படியாக அகற்றப்படும்.

இதன்மூலம் அந்த இனத்தவர்கள் தமது சொந்தப் பிரதேசங்களில் கல்வி, தொழில் வாய்ப்புகள், அரசியல் நடவடிக்கைகளைச் சுயமாக மேற்கொள்ளமுடியும். ஆயினும் இச்சலுகைகள் யாவும் தேசிய நலனைக் கருத்திற்கொண்டே அமைந்திருக்க முடியும்.

வெள்ளையர்களுக்கென தொழில் வாய்ப்புக்கள் பிரத்தியேகமாக ஒதுக்கப்படமாட்டா. கறுப்பினத்தவர் தமது விருப்பப்படி எப்பகுதியிலும் தொழில் வாய்ப்புக்களைத் தேடிச்செல்ல முடியும். இதில் எதுவித கட்டுப்பாடுகளும் இருக்கமுடியாது" என்றார்.

தென்னுபிரிக்க அரசின் இந்தப் புதிய அம்சங்களை உள்ளடக்கிய விரிவான அரசியல் மாற்றங்களை அதிபர் போத்தா இன்னும் இரு தினங்களில் வெளியிடுவார்.

இம்மாற்றங்கள் தென்னுபிரிக்க அரசின் கடந்த கால இன ஒடுக்கல் கொள்கைகளைக் கட்டுப்படுத்துவதாக அமைகிறது என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆயினும் இப்புதிய மாற்றங்கள் பெரும்பான்மைக் கறுப்பு இனத்தவரை எவ்வளவு தூரம் திருப்திப்படுத்துகின்றது என்பதிலேயே இவற்றின் வெற்றி தங்கியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## தமிழகத்தில் சீனக்குடுவைகள்

(சென்னை)

10ம், 12ம் நூற்றுண்டுகளைச் சேர்ந்த சீன குடுவைகள் தமிழ்நாடு வேதாரணியத்திற்கு வடக்கே 10 மைல் தொலைவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது போன்றே கங்கை நதியில் அகழ்வு வேலைகளை மேற்கொள்ளும்போதும் சீனப்பாத்திரங்கள், குடுவைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன இவை சீனவர்த்தகரும், தமிழ்நாடு வர்த்தகரும் கொண்டிருந்த உறவைக் காட்டுவனவாக உள்ளன. இந்த உறவு சோழர் காலத்தைச் சேர்ந்ததெனத் தெரிவிக்கப்பட்டது. (பி)

## அஸாம் மாநிலத்திலும் விரைவில் தீர்வு!

புதுடில்லி, ஆக. 14

அஸாம்மாநிலப் பிரச்னைக்கு தீர்வு ஏற்படும் சாத்தியங்கள் காணப்படுகின்றன.

ஆறுவருடகால இம்மாநிலப் பிரச்னை குறித்து இதுவரை காலமும் மத்திய அரசுடன் இழுபறிநிலையில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இந்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் அஸாம் மாநில, அரசியல் இயக்கங்கள் மற்றும் குழுக்களுடன் பேச்சுக்களை நடத்தினர்.

இங்கு வெளியார் குடியேற்றமே முக்கிய பிரச்னையாக உள்ளது. பங்களாதேஷிலிருந்தே பலர் இங்கு வந்து குடியேறியுள்ளனர். இதனாலேயே இங்கு பிரச்னை வலுத்திருந்தது

1983ம் ஆண்டு இப் பிரச்னை காரணமாக சுமார் 3000 பேர்வரை இங்கு கொல்லப்பட்டனர்.

அஸாமில் சட்டசபைத்தேர்தல்களை நடத்துவது வெளியாரை அப்புறப்படுத்துவது என்பன அஸாம் குழுக்களின் முக்கிய கோரிக்கைகளாகும். இவற்றுக்கு அரசு இணங்கியுள்ளது. இதனையடுத்து இங்கு விரைவில் தீர்வு ஏற்படுமென்று கூறப்பட்டது. (இ)

### மே. வேர்ஜினியா

## யூனியன்கார்பைட் இரசாயன உற்பத்தி இடைநிறுத்தம்!

வாஷிங்டன் ஆக 14

அமெரிக்க மே. வேர்ஜினியா 'யூனியன் கார்பைட' நிறுவனம் அதன் இரசாயன வாயு உற்பத்திகளை இடைநிறுத்தம் செய்துள்ளது.

நேற்று முன்தினம் இந் நிறுவனத்தின் 'டொக்ஸிக்' வாயு வெளியேறியதை யடுத்தே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சுமார் 500 கலன் 'டொக்ஸிச்' நச்சுவாயு நேற்று முன்தினம் வெளியேறியது. ஆயினும் இது தாக்கம் குறைவானதாகையால் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை. சாதாரண பாதிப்பு மட்டுமே ஏற்பட்டது.

இப்பாதிப்புக்குள்ளான 175 பேருக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கான மருத்துவச் செலவை வழங்க இத்தொழிற்சாலை முன்வந்துள்ளது.

இங்கிருந்து 'டெக்ஸிக்' நச்சு வாயு வெளியேறியதையும், அதற்கான காரணங்களையும் ஆராயும் வரையிலேயே இங்கு இரசாயன வாயு உற்பத்திகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. (இ)




# 4 அம்சக் கோரிக்கை நிராகரிப்புக்கு எதிர்ப்பு

(சென்னை)

இலங்கை இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் அரசின் பிரதிநிதிக் குழுக்களின் முன் நிபந்தனைகளுக்கு, தமிழ் பிரதிநிதக் குழுக்கள் அனைத்தும் ஏகோபித்த எதிர்ப்பினை தெரிவித்துள்ளன.

இலங்கை அரசின் குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்ற டாக்டர் எச். டபிள்யு ஜயவர்த்தன, தமிழ் பிரிவினைவாதிகள் சமர்ப்பித்த நான்கு அம்சக் கோரிக்கைகளை நிராகரித்து விட்டமையே இதற்குக் காரணமாகும்.

திரு. அமிர்தலிங்கம் பேசுகையில், இலங்கை அரசு முன் நிபந்தனைகளை விதித்து பேச்சுவார்த்தைகளை மேற் கொள்வது மிகுந்த அதிருப்தியை அளிப்பதாகக் கூறினர். திரு சம்பந்தன், திரு சிவசிதம்பரம் ஆகியோரும் தங்கள் வன்மையான கண்டனங்களைத் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான திம்பு இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் மூன்று மணிநேரம் நீடித்தது குறிப்பிடத்தக்கது. (பி)

### ஜப்பான் விமான விபத்தில்

## 4 பயணிகள் மட்டுமே உயிர் பிழைத்தனர்!

டோக்கியோ, ஆக-14

ஜப்பானிய 'ஜம்போ-747' விபத்தில் எட்டுப் பேர் காப்பாற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், 4 பேர் மட்டுமே உயிர் தப்பியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நால்வரும் அதிசயிக்கத்தக்கவகையில் உயிர்தப்பியுள்ளனர் என்று டாக்டர்கள் கூறினர். இவர்களுக்கு முறிவு, மற்றும் காயங்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது

இதேவேளை தேடுதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. உயிர் தப்பியவர்கள் மேலும் அகப்படலாம் என்ற நம்பிக்கை அருகியுள்ளது.

சிதைவுகளையும், விமானப் பயணப் பதிவுப் பெட்டியையும் மீட்கும் பணிகளே தற்போது இடம்பெறுகின்றன.

இதேவேளை இந்த ஜம்போ விமானத்தின் வால் பகுதி உறுப்பொன்று விபத்து நடந்த இடத்திலிருந்து 8 கிலோ மீட்டர்கள் தொலைவில் கடலிலிருந்து மீட்கப்பட்டது. ஜப்பானியக் கடற்படைக் கப்பல் ஒன்று இதனை மீட்டது.

மீட்புப் பணியாளர்கள் விபத்து நடந்த இடத்தில் தற்காலிகமாக ஹெலிகாப்டர் இறங்கு தளமொன்றை அமைத்துள்ளனர். இத்தளம் மீட்பு மற்றும் தேடுதல் பணிகளைத் துரிதப்படுத்தும் வகையிலேயே அமைக்கப்படடது

விபத்து நடந்த இடத்தில் மழைபெய்வதால் செங்குத்தான அம்மலைப்பகுதியில் நடமாடுவதும், ஏறி இறங்குவதும் சிரமமாகவுள்ளது

விபத்துக்குள்ளான இந்த விமானம் 7 வருடங்களுக்கு முன்னரும் ஓடுபாதையில் மேலே கிளம்பும்போது சேதமடைந்ததாம். அதன் வால் பகுதி 400 மீட்டர்கள் தூரத்திற்கு இழுபட்டுச் சென்றதாகக் கூறப்பட்டது. (இ)

### இராணுவ முகாமை

## சுத்தம் செய்ய மறுத்தவர் திருப்பி அனுப்பப்பட்டார் சவூதியில் சம்பவம்

(சவூதியிலிருந்து எம் சுரேந்திரன்)

சவூதி அரேபியாவில் உள்ள இராணுவ முகாமின் துப்பரவு வேலை செய்ய மறுத்த பண்டத்தரிப்பு வாசி ஒருவர் தனது நிரந்தர வேலையை இழந்து கொண்டார் இதனைத்தொடர்ந்து இவர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படடார்.

பண்டத்தரிப்பு அம்மன்வீதியைச் சேர்ந்த ஒருவருக்கே இக்கதி ஏற்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவின் தலைநகரமான றியாட்டிலுள்ள துப்பரவு வேலையை மேற்கொளளும் கம்பனி ஒன்றில் பணியாற்றிவந்த இவர், அல் ஹராஜ் என்னும் இடத்தில் அமைந்திருக்கும இராணுவ முகாமில் துப்பரவு வேலைக்கு அமர்த்தப்பட்டபோது அவ்வேலைசெய்ய மறுத்ததாலேயே கம்பனி இவரை இலங்கைக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது

பிரஸ்தாப இராணுவ முகா

(9-ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

வாழ்க்கை வசதிகளை அதிகரிப்பதென்பது எந்தவிதத்திலும் ஒழுக்க வளர்ச்சிக்கு உகந்ததாகாது என்றே பொதுவாகக் கூறலாம்.

—மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## இந்திய சுதந்திர சிந்தனைகள்

24 வயதுடைய இளம் பாரிஸ்டர் காந்தி 1893ல் தென்னாபிரிக்காவின் தலைநகரான, இன்று உலகெங்கும் பிரசித்திபெற்ற பிறெற்ரோறிய புகையிரத நிலையத்தில் வந்திறங்கியபோது அவரை வரவேற்க ஒருவரும் வரவில்லை.

காந்திக்கு உதவியளிக்க முன்வந்த அமெரிக்க கறுப்பர் அவரை ஒரு சிறு ஹோட்டலுக்கு கொண்டுபோனபோது, அதன் சொந்தக்காரனாகிய அமெரிக்கன் ஒரு இரவுமட்டும் தங்கவும், சாப்பாட்டை தங்கும்அறையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் அவருக்கு அனுமதி அளித்தான்.

வழக்கு விடயமாக வந்த பாரிஸ்டர் காந்தி, கூலி பாரிஸ்டர்' என்ற கேலிக்குள்ளாகி, வந்தவிடயத்தை முடித்ததும் தென்ஆபிரிக்காவில் இந்திய மக்கள்படும் அவலங்களை நீக்க அங்கு தங்கினார்.

இந்திய சுதந்திரத்துக்கு பரிசோதனை நிலையம் தென் ஆபிரிக்கா. பரிசோதகர் இளமை மிகுந்த பாரிஸ்டர் காந்தி.

இந்தியா திரும்பியதும் நாட்டின் பெருந்தலைவர்கள் அனைவரும் முள்ளுக் கிரீடத்தை அவர் தலையில் சூட்டினர். இன்று 38 வருடங்களுக்கு முன் மகாத்மாவின் தலைமைத்துவம் சுதந்திரத்தில் வெற்றி கண்டது. உலகம் பிரமித்தது. சுதந்திரக் கொண்டாட்டத்தில், மகாத்மா இந்து-முஸ்லிம் கலவரங்களை சிங்கத்தின் குகையிலேயே அடக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இன்று தென் ஆபிரிக்காவின் நிலைமைபற்றி தெரியாதவர் எவருமில்லை. கறுப்பர் நடத்திவரும் கலவரங்களில் அங்கு வாழும் இந்தியர் பலர் கொல்லப்பட்டதும் காந்தி தங்கியிருந்த வீடே உடைக்கப்பட்டதும் தென் ஆபிரிக்க சுதந்திரத்தின் இன்னொரு கட்டம்.

மகாத்மா இட்ட சுதந்திரத்தீ இன்று உலகின் பல பாகங்களிலும் தென் ஆபிரிக்க இனவெறி ஆட்சியின் இருளை ஒழிக்க முயலும் நாடுகளுக்கு உதவ வேண்டும்.

பாருக்குள்ளே நல்ல நாடு என்று பாரதி பாடிய பாரதம் இன்று எவ்வளவுதூரம் முன்னேறியிருக்கிறது?

அமெரிக்காவிலும், பிரான்ஸிலும் நடக்கும் இந்தியத் திருவிழா இதனை விளக்கும்.

இதுபற்றி வரவு செலவுத்திட்டம் தயாரிப்பது விஞ்ஞான மாமேதைகளுக்கே முடியாத காரியம். சாதாரண மனிதனின் கண்டனத்துக்கு கண்முன் நின்று உதவும் இரு சம்பவங்கள் உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கின. நாட்டின் விடுதலைக்குப் பெரும் பொறுப்பான தேசபிதா ஒரு இந்தியனாலே கொல்லப்பட்டார். நாடு பீடுநடை போடுமளவிற்கு முன்னேறி வந்த காலத்தில் உலகத் தலைவர்களில் மிகப் பிரபலம் பெற்ற பிரதமரி இந்திரா ஒரு இந்தியனாலே கொல்லப்பட்டார்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாகிய இந்தியாவில் நடைபெற்ற இச்சம்பவங்கள் மிக ஆழமாக ஆராயப்படுகிறது. ஜனநாயக அரசியல் கோட்பாடு 70 கோடி மக்களுக்கு பாரத பாரம்பரியத்தில் ஒத்துக் கொள்ளாத உணவா?

பலமொழி, பலமதம், பல இனம், பல்வேறு கலாசாரங்கள் கொண்ட இந்தியாவை ஆங்கில ஆட்சி தனது பிரித்து ஆளும் திறனாலும், படை பலத்தாலும் அடிமை நாடாக ஆண்டது. இன்று சுதந்திர வீறுகொண்ட மக்கள், தங்கள் மொழி, தங்கள் இனம், தங்கள் மதம் என்ற தீவிர உணர்ச்சியால் மத்திய ஆட்சிக்கு அடிபணியலாகாது என்று ஒரு பிரிவினைப் போக்கை நாடுகின்றனர்.

இந்திரா காந்தியின் ஆட்சியில் உருவான இவ்வித எதிர்ப்பு நாட்டின் ஒருமைப்பாட்டை சீர்குலைக்க முடியாதபோதும், அவருடைய உயிருக்கு முடிவு கட்டியது. கடந்த வருட சுதந்திரக் கொண்டாட்ட விழாவில் டில்லி செங்கோட்டையில் பிரதமர் இந்திரா நிகழ்த்திய பேருரை இந்த அபாயத்தைத் தொட்டுக் காட்டியது.

இந்திராவிற்குப் பின் இன்று பிரதமராக ஆட்சி புரியும் ராஜீவ் காந்தி பாரதம் என்றும் காணாத மக்களின் ஆதரவு பெற்றிருப்பது இவ்விதப் பிரிவினைப் போக்குக்கு ஒரு மாற்று மருந்தாகலாம்.

இன்று பஞ்சாப்பில், குஜராத்தில், அசாமில் நெருக்கடிகள் உண்டு. பின்தங்கிய பிரதேசங்களில் உணவு, உடை, உறைவிடம், தொழில் என்ற அடிப்படைத் தேவைகள் அற்ற பல லட்சம் மக்கள் இன்னொரு பிரச்னை. இது போன்று வடக்கில் ஜம்மு காஷ்மீர், தெற்கில் கேரளம் போன்ற அரசுகள் எல்லையற்ற தொல்லைகள் கொடுத்துக்கொண்டேயிருக்கின்றன.

'அரை நிருவாணப் பக்கிரி' காந்திக்கும் அவரின் பெயருடைய கேம்பிறிட்ஜில் பயின்ற விமான ஒட்டி காந்திக்குமிடையில் பல உலகங்கள் உண்டென்று பலர் நினைக்க இடமுண்டு. அது உண்மைதானு?

19-ம் நூற்றுண்டின் மனிதன் மகாத்மா; 21-ம் நூற்றுண்டு மனிதன் பிரகடனப்படுத்தாத மகாத்மா என்பது தவறு?

அன்னையர் இறந்த அக்கணத்திலே ஆட்சிப் பொறுப்பேற்ற நாற்பது வயதுடைய ராஜீவ், சோவியத் ரஷ்யாவில், பிரான்ஸில், அமெரிக்காவில்-அகில உலகிலுமே ஒரு சமாதானப் பறவையென்ற புகழைப் பெற்றிருக்கிறுர்.

இந்திய உபகண்டம் என்றும் இன மத மொழி போன்ற அடிப்படைப் பேதங்களை உருவாக்கும் அரசியல் பொருளாதாரச் சிக்கல்கள் நிறைந்த தேசம்.

இவற்றைச் சமாளித்து சமாதான வழியில் வெற்றி காண முயலும் இந்தியப் பிரதமர் இதுகாறும் காட்டி வந்த அரசியல் ஞானம் எந்தப் பாகுபாட்டுக்கும் இடமளிக்கவில்லை.

எமது இலங்கைக்கும் பரிகாரம் தேடும் பணியில் முன்வந்த பெருந்தன்மையும், உலகில் எப்பகுதியிலும் காணப்படும் இன வெறி. அநீதி, ஏகாதிபத்தியத் திமிர் அனைத்தையும் எதிர்க்கும் ஆன்மீகப் பலமும் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு உறுதியளிக்கும்.

# நாவலர் மண்டபத்தில் இந்து கலாசார நூலகம்

## யாழ். ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் அமையவிருக்கும் இந்து கலாசார பிரிவில் ஒரு பகுதியில் இந்து கலாசார நூல் நிலையம் அமைக்கப்படும். இந்நூல் நிலையத்தில் தற்போதுள்ள இந்து கலாசார நூல்களும் தமிழ்நாடு அரசு வழங்கிய இந்து கலாசார நூல்களும் இடம்பெறும்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

அரசினுல் சுமார் 19 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட நாவலர் கலாசார மண்டபத்தை ஒப்பந்த காரரிடமிருந்து சம்பிரதாய முறைப்படி யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சி.வீ. கே.சிவஞானம் கடந்த சனிக்கிழமை பொறுப்பேற்றுள்ளார்.

இம்மண்டபத்தை விரைவில் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அனுராதபுரமாவட்டத்தில் உள்ள

# பத்து கிராமங்களிலிருந்து சிங்களமக்கள் வெளியேற்றம்

## தமிழ் சுவரொட்டிகளின் எதிரொலி

(அனுராதபுரம்)

அனுராதபுர கிராமங்களில் வாழும் சகல சிங்களமக்களும் உடனடியாக வெளியேறவேண்டும் என்ற சுவரொட்டிகளைத் தொடர்ந்து பெருந்தொகையான சிங்கள மக்கள் தங்கள் கிராமங்களைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறுர்கள்.

அனுராதபுர மாவட்டத்திலுள்ள பத்துக் கிராமங்களிலிருந்து கடந்த திங்கட்கிழமை முதல் சிங்களமக்கள் வெளியேறிவருகிறுர்கள். அனுராதபுரத்திலிருந்து 14 மைல்களுக்கு அப்பாலுள்ள இப்புகுளம் என்ற கிராமத்தில் காணப்பட்ட சுவரொட்டிகளை தொடர்ந்து மக்கள் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

சகல சிங்கள கிராமவாசிகளும் உடனடியாக வெளியேற வேண்டும் என்று தமிழில் அச்சுவரொட்டிகளில் எழுதப்பட்டிருந்தது.

கிராமங்களைவிட்டு உடனடியாக வெளியேற முடியாத நிலையிலுள்ள சில கிராமவாசிகள் எந்த நேரம் என்ன நடக்குமோ என்ற அச்சத்துடன் இருக்கின்றுர்கள்.

ஹொறவட்டத்தானையில் மட்டும் சுமார் 1,000 சிங்கள கிராமவாசிகள் தங்கள்சொந்த இடங்களைவிட்டு வெளியேறி அனுராதபுரத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

மயிலகஸ்வேவா என்ற கிராமத்திலிருந்து 52 குடும்பங்களில் 27 குடும்பங்கள் வெளியேறிவிட்டதாகவும் பொடிக்சங்குளத்திலிருந்த 36 குடும்பங்களும் வெளியேறிவிட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன,

இந்த தமிழ் சுவரொட்டியினுல் பீதியடைந்த மற்றொரு கிராமமான பெத்தகமவிலிருந்து 22 குடும்பங்களும், நெல்லிகன்னவில் 19 குடும்பங்களும், மாறகலன்வேவாவில் 26 குடும்பங்களும் வெளியேறியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மொறகஹவேவாவிலிருந்து 44 சிங்கள குடும்பங்களும், உடவிவாவிலிருந்து 22 குடும்பங்களும், வெஹரகமவிலிருந்து 11 குடும்பங்களும், உட தென்கனிஸ்வேவாவிலிருந்து 5 குடும்பங்களும் வெளியேறிவிட்டதாகக் கூறப்படுகிறது.

இக் கிராமங்களிலிருந்து வெளியேறிய மக்கள் மேலிடத்திலிருந்து முடிவுகளை எதிர்பார்த்து பாடசாலை, தேவாலயம், விகாரைகளில் தஞ்சமடைந்துள்ளனர். கிராமங்களிலுள்ள மற்றும் மக்களும் வெளியேறிக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது

இச்செய்தி நேற்று வெளியான ஆங்கிலப்பத்திரிகை ஒன்றில் வெளிவந்தது. (க)

## ஜப்பானிய விமான விபத்தில் மூன்று இந்தியர்

(லண்டன்)

524 பிரயாணிகளுடன் விபத்துக்குள்ளான ஜப்பானிய 'ஜம்போ ஜெட்' விமானத்தில் மூன்று இந்திய பிரஜைகளும் பயணம் செய்துள்ளனர். புதுடில்லியைச்சேர்ந்த கே. முகர்ஜியும் அவரது மனைவியும், எஸ் சௌவ்ஸரீரியா ஆகியோரே இந்த இந்தியர்களாவர்.

இந்த விமானத்தில் பிரயாணம் செய்த ஜப்பானியர் அல்லாத 21பேரில் 19பேரின் விபரங்களை ஜப்பானிய எயர்லைன் அறிவித்துள்ளது.

இந்த மூன்று இந்தியர்களும் இறந்தவர்களில் அடங்குவர்.

# இந்திய மீனவரின் வள்ளங்களுக்கு— நஷ்டஈடு வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படுகிறது

## நீதிமன்றத்தில் சட்டத்தரணி

[யாழ்ப்பாணம்]

"சேதமாக்கப்பட்ட இந்திய மீனவரின் வள்ளத்திற்குரிய நஷ்டஈடு வழங்குவது பற்றி வெளிவிவகார அமைச்சு, கடற்றொழில் அமைச்சு, இந்திய ஸ்தானிகராலயம் ஆகியவை ஆலோசனை நடத்திவிருக்கின்றன."

யாழ். மேல் நீதிமன்றத்தில், அரசசட்டத்தரணி எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்

யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். ஆனந்தக்குமாரசாமி முன்னிலையில் இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த வருடம் மார்ச் 24ம் திகதி இந்திய மீனவர் பொன்னுண்டி கணேசன் கடற்படையினுல் கைதுசெய்யப்பட்டு, வள்ளமும்கைப்பற்றப்பட்டது. யாழ். மேல் நீதிமன்றத்தினுல் விசாரணை செய்யப்பட்டு, அவர் ரிமாண்டில் வைக்கப்பட்டார்.

பின் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமலேயே அவர் விடுதலை செய்யப்பட்டதுடன், வள்ளத்தையும் திருப்பி ஒப்படைக்குமாறுபணிக்கப்பட்டது.

நீதிமன்றப் பொறுப்பில், பொலிஸ் பாதுகாப்பில் வள்ளம் இருந்தபோது சேதமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து வள்ளத்திற்குரிய பெறுமதியைவழங்குமாறு இந்திய மீனவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர்.

(11ம் பக்கம் பார்க்க)

## காத்திடும் அன்னை

அலைகடல்சூழ் நாவாந்துறை நகரில்
அற்புதமாய்த் திகழ்ந்தன்னை பதியமர்ந்து
பஞ்சம்பகைவினைதான் தடுத்தே
தஞ்சமெனக் காத்திடுவாள் என்றுமவள்

ஆவணியில் ஆலயத்தோர் விழாவெடுத்து
அழகுமிகு தேவஅன்னை பவனிவர
அலைமோதும் நெஞ்சத்தின் துயர்தாங்கி
அமைதி வாழ்வு தந்திடுவள் தாயெமக்கே

பன்னிரு விண்மீன்கள் புடைசூழவே
பாதமதில் சந்திரனும் தான்கூடவே
மைந்தனும் பரமனைக் கண்டாளவே
மகிமையோ டெழுந்தாள் விண்ணகத்தே.

நாவாந்துறையூர் ம. சிந்தாத்துரை.

[இன்று நாவாந்துறை பரலோகமாதா திருநாள்]

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

## கடைத்தெரு - வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகர்

# தேர்த்திருவிழா சிறப்பு மலர்

★


தேவஸ்தான பிரதமகுரு நா. முத்துச்சாமி குருக்களின் ஆசியுரை, யாழ்ப்பாணம் வண்ணை வேம்படி விநாயகன் தேர்த்திருவிழாவை முன்னிட்டு, வெளிவரும் சிறப்புமலர், அறிஞர் ஆக்கம் பலபெற்று கஜமுகன் புகழை கலியுக மெங்கும் பரப்பட்டும்
நா. முத்துச்சாமிகுருக்கள் [தேவஸ்தான பிரதமகுரு]

வண்ணை வேம்படி விநாயகனின் தேர்த் திருவிழா சிறப்புற பிரார்த்திக்கிறோம்:

**கணேஸ்சாரதி ரேணிங் வேக்ஸ்,**

50, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்; [ஈழநாடு காரியாலய முன்பாக]

பி. வி. சி. குழாய்கள். அதன் உதிரிப்பாகங்கள், மற்றும் எல்லாவிதமான பீங்கான் வகைகளினதும் சில்லறை மொத்த வியாபாரிகள்

**கோல்டன் செரமிக்,**


2 D, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஓங்காரமூர்த்தியின் ஒளிமிளிரும் திருவடிகள் வாழ்க

**என். வைத்திலிங்கம் அன்ட் கொம்பனி,**

138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


★



### வாழ்த்துவோம் நாம்வாழ!

வேதமுதலே விநாயகனே என்று பலர் ஓதி நாதவடிவான நின் நல்லாசி பெற்றதினால் ஓதமறந்த உன்மத்தர் நாங்கள் இன்று பேதமகன்று நின் ஆதிபுகழ் பாடி. அருள் நாடி சோதிவடிவான சுந்தரனே! நின்தனக்கு வேதவழி நின்று விழாக்காண ஆசைகொண்டு செய்யும் வினை அனைத்தும்.

திருவினையாய் ஆக்கிடுவாய் பொய்யும் புரட்டும் போக்கிடுவாய், நல்ல செய்யும் சிந்தை நல்கிடுவாய்

கையும் மெய்யுமாய் அருள் பெய்திடுவாய் வேம்படி அமர்ந்து வேண்டும் வரம் தருவாய் வாழ்த்துகிறோம் நின்னை, வாயார மனமார, தாழ்த்துகிறோம் எம்புன்தலைகள் நின்தாள் அடிக்கே

நீ எம்மை வாழ்த்துதற்கே

'அன்பன்'

★


யாழ்ப்பாணம் வேம்படி விநாயகப்பெருமான் சித்திரத்தேரேறி எங்களை ஆண்டருள் புரிவதற்கு வெளிவருகின்றவேளையில் இச்சிறப்புமலர் வெளியிடும் அன்பர்களுக்கும் எங்கள் தயாரிப்புகளுக்கு ஆதரவு நல்கும் அன்பர்களுக்கும் விநாயகப் பெருமான் திருவருள் பெருகுவதாக! எங்கள் அன்பலாதனைகள்

இங்ஙனம்
**மில்க்வைற் தொழிகம்**

**தாமோதரவிலாஸ்**
239, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23065

**முருகன் அச்சகம்**
175 ஏ, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்,

**ஈகிள் அச்சகம்**
161, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
போன்; 22301

**அம்பலவாணர் அன் சன்ஸ்**
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24291

இவ்வருட உற்சவங்களுக்கு மஹோற்சவக் குருவாக கடமையாற்றுபவர் சிவஸ்ரீ பத்மகுமாரகுருக்கள் வாற்றங்கரை விநாயகர் ஆலயம், தனியூற்று.


★


உங்கள் அபிமானத்திற்குரிய மில்க் வைற் நீல சோப் தற்போது கூடிய நிறையுடன், புதிய முறையில் மெருகூட்டப்பெற்று எங்கும் விற்பனையாகிறது.




# மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

இரதோற்சவம் சிறப்புற
இனிது வாழ்த்துகிறோம்!

சுகபாணி ஸ்ரோர்ஸ்,

214, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 22566 / 23538

உள்ளூர்விளைபொருட்கள்
கொள்வனவாளர்களும்,
கமிஷன்
விற்பனையாளர்களும்.

குளோபல்
கொம்யூனிகேசன்ஸ்,
யாழ்ப்பாணம்.

சரஸ்வதி
எலக்ரிக்கல் வேக்ஸ்,
151, சிவன் பண்ணைவீதி,
யாழ்ப்பாணம்.

தேர்த்திருவிழா சிறப்புற
எமது நல்லாசிகள்!
புதுப்பொலிவுடன் இப்
போதும் தொடர்ந்து
சேவை அளிக்கிறது;
எவர்விசன்,
கொட்டடிச்சந்தி,
யாழ்ப்பாணம்.

ஐங்கரன் அருளுக்கு
வேண்டிநிற்போம்
பாலகிருஷ்ணா
ஸ்ரோர்ஸ்,
153, மானிப்பாய்வீதி,
யாழ்ப்பாணம்.

கொழும்பு
டெக்ஸ்ரைல்,
109, கிரான் பசார்,
யாழ்ப்பாணம்.
போன்: 24229

யாழ். நகர் மத்தியிலுள்ள
பிள்ளையாருக்கு, வருடா
வருடம் விழா எடுப்பதோடு
நின்றுவிடாது கோவிக்
ந ளுக்குநாள்
பொலிவு பெறவும்
பங்களித்திடுவோம்.
எஸ். ரி. சி. எ.
மகளிர்
தொழிற்கல்வி
நிலையம்,
37 (149 சிவன்பண்ணை வீதி
யாழ்ப்பாணம்.

# கஜமுகன் அருள் க...

## யாழ். வேம்படி சித்திவிநாயகர் கோவில் வரலாறு

பேரண்டங்களின் இறைவனும், விக்கினங்களைக் களைபவனும் வினைதீர்ப்பவனும் ஆன்மாக்களுக்கு அருள்பாலிப்பவனும் தன் அடியார்களுக்கு சகல சித்திகளையும் வழங்குபவனும் திருவண்ணை, பெரிய கடைக்கு அருகாமையில், ஐயன்தெரு வேம்படி ஸ்தலத்தில் திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் வரலாற்றை எழுதப்புகுமுன் யாழ்ப்பாண மாநகரத்தின் நடுநாயகமாக விளங்கும் புகழ்மிக்க ஸ்ரீ வாலாம்பிகை சமேதஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி கோவிலின் சரித்திரத்தைப் பற்றி எழுத வேண்டியது எமது தலையாய கடமையாகும். ஏனெனில் இந்த இரு திருக்கோவில்கள் வரலாறுகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன. சுருங்கச் சொன்னால் ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயம் நிர்மாணிக்கப்படவில்லையென்றால் வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் எழுப்பப்படுவதற்குரிய சாத்தியக் கூறுகள் இருந்திருக்க முடியாதென்றே சொல்ல வேண்டும்.

யாழ்ப்பாண மாநகரத்திற்கே ஒரு அணிகலனாகத் திகழும் திருவண்ணை வைத்தீஸ்வரன் கோவில் கி.பி 1750-ம் ஆண்டில், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டதென வரலாறு கூறுகின்றது. இதை ஸ்தாபித்தவர் ஸ்ரீ வைத்திலிங்கச் செட்டியார் என்னும் பெருமகனாவர். இவரது தந்தையான கோபாலச் செட்டியார் என்பவரும் தாயாரும் சோழவள நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த வலிகலம் என்னும் சிராமத்திலிருந்து இங்கு வந்து குடியேறினார்கள். பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், அந்நாளில் ஒல்லாந்த அரசனின் ராஜப்பிரதிநிதியாக யாழ்ப்பாணக்கோட்டையிலிருந்து இந்நாட்டை ஆட்சி செலுத்தி வந்த ஒல்லாந்த தேசாதிபதி பால்க் (Balk பிரதான அதிகாரியாயும், துவிபாஷகராகவும், ராஜவாசல் முதலியாராகவும் கடமையாற்றி வந்த கொச்சிக் கணேசையர் அல்லது ஆதிநாரயணகணேசையர் என்பவரை அடுத்து அவருடைய சேவகத்திலிருந்து வந்தார் கோபாலக் செட்டியார். கணேசையர் ஒருநாள் கோபாலச் செட்டியாரைக் காரணமின்றிக் கண்டித்தபோது அவர் ஐயருடைய சேவையிலிருந்து விலகிச்சென்று சம்பு வியாபாரத்தில் ஈடுபட்டார். செட்டியார் யாழ்ப்பாணம் வந்தநாள் முதலாக ஒரு விநாயகரை வைத்துப் பூஜித்து வந்தார். அவ்விநாயகருக்குக் காலப்போக்கில் சிறியஆலயமொன்று எடுக்கப்பெற்று இன்று யாழ்ப்பாணம், பெரியகடைச் சந்தைக்கு அண்மையில், காங்கேசன்துறை வீதியில், வேம்படி சித்திவிநாயகர் என்ற பெயரால் வழங்கிவருகின்றது. ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவில் 1750-ம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட பின் 1780-ம் ஆண்டுக்குள் தற்போதுள்ள நிலையில் இக்கோவில் விஸ்தரிக்கப்பெற்றுள்ளது. இவ்விநாயகர் கோவிலுக்குப் பின்புறத்தில் தற்போதைய ஸ்ரீ பாரதி பாஷிய வித்தியாசாலைக்கு கடடால் குடிசை அமைத்து அங்குதான் கோபாலச் செட்டியாரும் அவரது குடும்பமும் வாழ்ந்து வந்தார்களெனச் சொல்லப்படுகின்றது.

யாழ் வைத்தீஸ்வரன் கோவில் அமைப்பதற்காகக் கோபாலச் செட்டியாரின் மகனான வைத்திலிங்கச் செட்டியார் தஞ்சாவூர் சென்று அப்போது தஞ்சை அரசபீடத்தை அலங்கரித்து ஆட்சி புரிந்து வந்த மஹாராஷ்டிர மன்னன் சந்திரபதி பிரதாப்சிங் மஹாராஜாவின் அரச கட்டளை (Royal Charter) பெற்று சிற்ப சாஸ்திரத்திலும் கோயில் கட்டக் கலையிலும் விற்பன்னரான ஸ்ரீ கண்ணையிர ஸ்தபதியார் என்பவரைத் தலைமையாகக் கொண்ட சிற்பாச்சாரியர் கோஷ்டியை இங்கு அழைத்து வந்து 1777-ல் வைத்தீஸ்வரன் கோயிலைக் கட்டினார். வைத்தீஸ்வரன் கோவிலை நிர்மாணித்த கண்ணையிர ஸ்தபதியாலேயே சித்திவிநாயகர் கோவிலும் இரண்டொரு வருடங்களில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இக்கோவில் வைத்தீஸ்வரன் அறங்காவலர்களாலேயே அதாவது கோபாலச் செட்டியார், வைத்திலிங்கச் செட்டியார் இவர்களுடைய வழித்தோன்றல்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றது ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவில் அர்ச்சகர்களாகக் கடமையாற்றி வந்த சிவஸ்ரீ அம்பிக்குருக்கள், துரைசாமிக் குருக்கள், வைத்தியநாதக் குருக்கள் இன்னும் பல சிவாச்சாரியர்களால் ஸ்ரீ சித்திவிநாயகர் கோவிலின் நித்திய பூஜாகலாபங்கள் ஆரம்பகாலங்களில் நடாத்தப்பெற்றுவந்தன. அதன் பின் தற்போதைய அர்ச்சகராகக் கடமை பார்க்கும் சிவஸ்ரீ முத்துச்சாமிக் குருக்களின் தந்தையாரான சிவஸ்ரீ நாகேஸ்வரக் குருக்களாலும் கோவிலின் பூஜா கைங்கரியங்கள் சிறப்புற நடாத்தப்பெற்று வந்தன. சுமார் இருபது வருடங்களுக்கு முன் தற்போது இக்கோவிலின் அர்ச்சகராக விளங்கும் சிவஸ்ரீ முத்துச்சாமிக் குருக்கள் அவர்கள் இக்கோவிலின் பூஜா கைங்கரியங்களை ஏற்றபின் இக்கோவில் பல வழிகளிலும் முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது.

இக்கோவிலின் ஆரம்ப காலத்திலிருந்து சிலகாலம் இந்தக்கோவிலில் விசேட திருப்பணிகளோ, திருவிழாக்களோ இடம்பெறவில்லை. ஆனால் சிவஸ்ரீ நா. முத்துச்சாமிக் குருக்கள் அவர்களுடைய பெருமுயற்சியால் 9-2-1972ல் இக்கோவில் புனருத்தாரணம் செய்யப்பெற்று புனராவர்த்த மகாகும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றது. விநாயகப்பெருமானின் அடியார்களின் பலரது தாராளமான பொருளுதவியாலும், வைத்தீஸ்வரன் தேவஸ்தான அறங்காவலர்களின் ஆசீர்வாதத்தாலும், இவ்வளவு பெரிய கைங்கரியத்தை ஸ்ரீ குருக்கள் அவர்கள் நடத்தினார்கள். இக்கோவிலில் இப்போது இருபத்தி ஐந்து தினங்களுக்கு உற்சவம் நடைபெற்று இரதோற்சவம், தீர்த்தோற்சவம் முதலிய விழாக்களோடு உற்சவம் நிறைவு பெறுகிறது.

1977ல் அமைக்கப்பட்ட சித்திரத்தேரில் இன்று (15-8-85) விநாயகப்பெருமான் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

ரதேட்யோ நமஹா! ரதபத்ய்யோ நமஹா!

(ஸ்ரீருத்ரம்)

சுபமஸ்து



ந...

இச்சிறப்பு மலர் ...
வெளிவர மனமு...
விய வர்த்தகப் ...
கோவிலின் வரலா...
காவலர் திரு. வை...
கட்கும், மலருக்கு ...
தான பிரதமகுரு ...
கும், சிவநெறிப்புர...
அவர்களுக்கும் வி...
சியத்தை வலியுறு...
அவர்களுக்கும் எம...

— மல...

வண்ணை கடைத்தெரு வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
தேர்த்திருவிழா சிறப்புற எங்கள் நல் வாழ்த்துக்கள்!

ஆர். எஸ். அச்சகம்,
149, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 23669

சித்திரத் தேரி...
திருவருள் எ...
சிவ...
282, ஆ...

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

★

சிவ கணேசன் ஸ்ரோர்ஸ்,
41, கிரான் பசார், யாழ்ப்பாணம்.
போன்: 23169




ஜெயலட்சுமி கொம்பனி,
244, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 23894

# கலியுகமெங்கும் பரவட்டும்



## நன்றி

..ச்சிறப்பு மலர் ஆக்கம் பெற்று சிறப்புற ..ளிவர மனமுவந்து விளம்பரம் தந்துத.. வர்த்தகப் பெருமக்களுக்கும், மேற்படி ..விலிவ வரலாறு தந்துதவிய ஆலய அறங்..வலர் திரு. வை. கந்தப்பசெட்டியார் அவர்..தும், மலருக்கு ஆசியுரை வழங்கிய தேவஸ்..ன பிரதமகுரு நா முத்துச்சாமி குருக்களுக்.., சிவநெறிப்புரவலர் க கனகராஜா (ச. நீ) ..ர்களுக்கும் விநாயக வழிபாட்டின் அவ..ந்தை வலியுறுத்திய க சிவராமலிங்கம் ..ர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி.

– மலர் வெளியீட்டுக் குழு –

## கடைத்தெரு விநாயகன் கலிதீர்ப்பான்

உலகுபுகழ் தண்ணளிச் செங்கமல பாதமும்
  உயர் தண்டை சிலம்பினெளியும்
உற்ற பொன் னரைஞாணும் பீதாம்பரத்துகிலும்
  ஓங்கு சீர்ப் பேழை வயிறும்

இலகு திரு கரமைந்தும் வேழமதின் வதனமும்
  ஏற்றமருப் பொன்றி னழகும்
இயல்பாகவே நெற்றிக் கண்ணினொடு திலகமும்
  எழிலான வண்ண முடியும்

நிலவுதிரு வுருவாக வந்தவா எமையாள
  நினைந்துமே வருதல் வேண்டும்
நீக்கமற நிறைவான கருணை கரக்கடவுள்
  நினையன்றி வேறு முண்டோ

விலகவினை யெனவண்ணைக் கடைவீதி பிசுமந்தம்
  விரும்பிவாழ் மறையின் முதலே
வேதாந்த நாதாந்த அருவுருவ னேசித்தி
  விநாயகா போற்றி! போற்றி!!

நன்றி!  அருட்கவிமணி
வே. செல்வநாயகம்

உ

## விநாயகனே இன்பம் அருள்வாய்!

தேவர் தொழுதெழுங்
  கருணைச் செல்வனே போற்றி
சிறந்தொளிரும் மங்கல
  சொரூபனே போற்றி
ஓவற சித்திகள் அனைத்தும்
  உதவுவோய் போற்றி
ஒலிசெழு கிண்கிணி பாத
  சால நூபுரங்கள்
விரைவியொளிர் சரணனே
  போற்றி மததாரை
விரவிய திண்கபோலனே
  போற்றி நினதருளால்
பாவமொடு பல பிணியும்
  பம்பு வறுமைகளும்
பலவான இடர்களையும்
  பாற்றுக இன்புறவே.

விநாயக புராணம்

புகழ்பெற்ற யானைமார்க் குளிர்பானங்களை
அருந்தி மகிழுங்கள்

**சிவா ஸ்ரோர்ஸ்**
179, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 22072

விநாயகன் திருவடி விளங்குக உலகமெலாம்

**எஸ். வி. முருகேசு**
154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன், 22564

யானைமுகனை தொழுவார்க்கு
எல்லா நலமும் உரித்தாகுக

**நாதன் ஸ்ரோர்ஸ்**
87/1, (213) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 23581

பித்தளை, செம்பு, இரும்பு பொருட்களுக்கு
குரோமியம், தங்கம், வெள்ளி, மின்பூச்சுகள்
உத்தரவாதத்துடன் செய்யுமிடம்.

**பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்**
(சிறந்த பித்தளை, செம்பு, எவர்சில்வர்,
அலுமினிய பாத்திர உற்பத்தியாளர்)
251 (107) கே கே எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 23019

..சித்திரத் தேரில் வீதிவலம் வரும் விநாயகப் பெருமானின்
..திருவருள் எல்லோருக்கும் உரித்தாகுக!

**..சிவகுமார் ஸ்ரோர்ஸ்,**
..282, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23738

பிரணவ ரூபனை போற்றி நிற்போம்

**குணரத்தினம் ஸ்ரோர்ஸ்**
96, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22556




..ம்பனி,
..ட. வீதி,
..ம.

வண்ணை கடைத்தெரு வேம்படி
ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
தேர்த் திருவிழா சிறப்புற
எங்கள் நல்வாழ்த்துக்கள்!

★

**புஸ்பா ரேடர்ஸ்,**
11/4 ஏ, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24237

போற்றி கணேச மூர்த்தியே போற்றி
போற்றி விநாயக புராதன போற்றி
போற்றி மகேஸ்வரன் புத்திரா போற்றி
போற்றி ஹேரம்ப வித்தகா போற்றி

**பரிமளா ஸ்ரோர்ஸ்**
26 ஏ மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: — 23224

# விநாயக வழிபாடு அவசியமா?

சி. எஸ்.
கனகரத்தினம்
102, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

★

வண்ணை வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் திருவடி களைத் தொழுபவர்க்கு எல்லா நலமும் பெருகுக.
—ஓர் அன்பர்

★

வேம்படி விநாயகனின் அருள் உலகமெலாம் பரவட்டும்!
சுபாஸ் கபே
யாழ்ப்பாணம்
போன்: 22578

★

லட்சுமி விலாஸ்
[திண்ணப்பிள்ளை கிளப்]
205. கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

★

சாரதா
ஜுவல்லர்ஸ்
[உரிமையாளர்
க. செல்லத்துரை]
தங்கப்பவுண்
நகை வியாபாரம்
341, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

★

யூனியன் றஸ்ற்
அன்ட்
இன்வெஸ்ற்மென்ற்
லிமிட்டட்
122, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24267

'வழிபாடு' என்ற சொற் பிரயோகமே கருத்தழிந்து விடுமோ என்று அஞ்சவேண்டிய காலகட்டத்தில் விநாயக வழிபாடு அவசியமா என்ற வினா விந்தையானது தான். விந்தைகள் பலபுரிந்து உலகை விளையாட்டுப் பந்தாக மாற்ற நிற்கிறதுவிஞ்ஞானம், "தெய்வம் என்பதோர் சித்தம்" உண்டாதலே கடினமாகி வருகிறது. இப்படிப்பட்ட சிந்தனைச் சுழலில் அகப்பட்டு கரைசேர முடியாத எமக்கு ஆற்றுப்படை பாடிவழிகாட்டவும் இளைஞர் கூட்டம் ஒன்று இருக்கவே செய்கிறது. என்று உணரும்போது "உண்டால் அம்ம இவ்வுலகம்" என்று பாடிய பழந்தமிழ்ப்புலவனை நெஞ்சு வாழ்த்துகிறது.

"பிரபஞ்சம் மெத்திப் போச்சு" என்று சலிப்புக் கொட்டுபவர்களாகவே நம்மில் பெரும்பகுதியினர் வாழ்கிறோம். "கோயிலுக்குப் போகலாம் தான் குளிக்க இல்லை" என்ற முனகலும் கேட்கிறது. இத்தனை அவசரமான உலகம் நமது உலகம். "நாய்க்கு வேலையில்லை நடக்க நேரமும் இல்லை" என்ற நாட்டுமொழி எத்தனை பொருத்தமானது எமக்கு

இந்த நிலையில் இலகுவான வழிபாட்டு முறைகளை இப்படி ஒருகாலம் வரும் என்று முன்னோர் வகுத்தமை பேர் உபகாரமே. பட்டி தொட்டி எல்லாம் அமர்ந்து அடியார்களுக்கு அருளை எளிதில் நல்கும் தெய்வமாக விநாயகனைச் காண்கிறோம். வேண்டிய போதெல்லாம் பசுவின் சாணத்திலும் ஆவாகனப் படுத்தக் கூடிய தெய்வமாக அறிவொளியும் அருவொளியும் அல்லல் தீர்க்கும் அருமருந்தும் விநாயகன் என்பது முந்தையோர் துணிபாகும். இக் கருத்தை வலியுறுத்த எத்தனை கதைகள்! முன்னவர்க்கு முன்னவனே முதல் வேண்டும் தெய்வமாகவும் முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகனுக்கு மூத்தவனாய், தமிழ் மூன்றும் எம்பால் எளிதில் கிட்ட வழிசெய்யும் தெய்வமாய், இன்னல் போக்கி இன்பம் தரும் பிள்ளையாய் விநாயகனை இந்துக்கள் கண்டிருக்கிறார்கள்.

விநாயக வணக்கம் தென்கிழக்காசிய நாடுகள் அத்தனையிலும் பரவி இருக்கிறது. இந்திய நாட்டிலும் இலங்கையிலும் மிகப்பிரசித்தி பெற்ற தெய்வம் விநாயகனே. வரலாற்று ரீதியிலும் அன்பர்க்கருளும் தெய்வமாக விநாயகன் இடம் பெற்றுள்ளார்.

ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த நரசிம்ம பல்லவனின் சேனாதிபதி பரஞ்சோதியார் வாதாபிக்குப் படை எடுத்துச் சென்று புலிகேசியை வென்றவரலாறும் அவ்வெற்றிக்கு உறுதுணை புரிந்த வாதாபிகணபதி தமிழ் நாட்டில் திருக்கோயில் கொண்டவரலாறும் உணரப்படும்போது விநாயக வணக்கத்தின் அவசியம் தெளிவாகிறது.

காட்சிக்கு எளியனாய் கலக்கம் தீர்க்கும் பெருங்கடவுளாய், அரசன் முதல் ஆண்டி வரை அணுகக்கூடியவனாய், குற்றம் பொறுத்துக் குணம் கண்டு கிருபைதரும் தெய்வமாக நம் மூத்தோர் போற்றியவன் விநாயகன். தனக்கு மேல் ஒருவன் இல்லாத தலைவன் விநாயகன். ஆகவே நம்மால் வணங்கப்படும் முதற் தெய்வமும் இவனே.

க. சிவராமலிங்கம்

## விநாயகர் பெருமையும் அருளிப்பாடும்

சிவபெருமானை வணங்குபவர்க்கு உண்டாகும் இடர்களை நீக்கவே விநாயகப்பெருமான் தோற்றியருளினார். இவ்வுண்மையை திருஞானசம்தப் பெருமான் 'பிடியதனுருவுமை' என்ற தேவாரத்தில் அருளிச்செய்துள்ளார்.

அகத்தியரின் கமண்டலத்திருந்த காவிரியாற்றை இந்திரனுக்காக விநாயகப்பெருமான் காகவடிவெடுத்துப் பெருகச் செய்தார்.

பின்னர் அகத்தியருக்கும் கமண்டலத்தில் ஆற்றை வழங்கினார். அப்போது அகத்தியர் விநாயகப்பெருமானை வணங்கி 'பெருமானே நான் விரும்பி வணங்கும் போது என் முன் வெளிப்பட்டு அருளவேண்டும்' என விண்ணப்பித்தார்.

பிள்ளையார் அகத்தியரை நோக்கி 'நீ எப்போதும் சிவபெருமானை வணங்குபவன்: ஆதலால் நீ என்னையும் எப்போதும் வணங்குவதாகவே நான் கருதுகின்றேன். எனவே நீ வேண்டும் போதெல்லாம் நான் உனக்கு அருளுவேன்' என்று கூறியருளினார்.

திருஞானசம்பந்த சுவாமிகளுக்கும் திருநாவுக்கரசருக்கும் திருவீழிமிழலையில் சிவானுக்கிரகமான பொற்காசை வழங்கியவர் விநாயகப் பெருமானே. இவ்வாறு பொற்காசு வழங்கிய விநாயகராலயங்கள் இன்றும் திருவீழிமிழயில் உண்டு.

திருநல்லூர்ப் பெருமணம் என்ற தலத்தில் திருஞான சம்பந்த சுவாமிகள் திருமணத்தின்பின் எல்லோரும் முத்தியடைந்த போது அக் கோயிலுக்குச்சமீபமாக உள்ள தெருச் சந்தியில் இருந்த பிள்ளையார் அவ்வழியால் சென்றவர்களுக்கு சமபந்தன் எல்லோருக்கும் முத்தியை வழங்குகின்றான். நீங்களும் போய் முத்தியடையுங்கள் என்று வழிப்படுத்தியதான ஒரு கர்ண பரம்பரைக்கதையுண்டு.

ஒளவையாருக்கு முத்தமிழ்ப் புலமையை வழங்கியமட்டு மன்றிப் பின்னர் தன்தும்பிக் கையாலெடுத்து திருக்கயிலாய மலையில் சேர்த்தார் என்பர்.

இப்படியான வரலாறுகளால் விநாயகப்பெருமானுக்கு செய்யும் வழிபாட்டால் சிவனருளும், சிவவழிபாட்டால் விநாகர்அருளும் கிடைக்கும் என்ற உண்மையை அறியலாம்.

பழம் - அப்பம் - அவல்-பொரி முதலிய நிவேதனங்களைப் படைத்துக் குட்டிக் கும்பிடுவதாலேயே விநாயகர் அருளை எளிதில் பெறலாம்.

விநாயகர் வெவ்வினையை வேரறுப்பார் வேட்கைகள் (விருப்பங்கள்) எல்லாவற்றையும் விநாயகர் அருள்வார்; விநாயரை வணங்குபவர்களின் தீவினை அவர்களைவிட்டு விலகிவிடும், என்பன போன்ற உண்மைகளைப் பதினொராம் திருமுறைகளில் உள்ள விநாயக தோத்திரங்கள் உணர்த்துகின்றன.

பொய்மையற்ற தூயவிசுவாசமான வணக்கம் விநாயகர் அருளைப் பெற உதவும்.

— அருளாளன்

வண்ணை வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்.
ஈஸ்வரி
ஸ்ரோர்ஸ்
304, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 23010

★

கே. கே. ஏ.
கந்தையாப்பிள்ளை
122, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 22311

★

வெவ்வினையை நீக்கும் விநாயகப் பெருமான் திருவருள் பெருகுக!
பூபாலசிங்கம்
புத்தகசாலை
யாழ்ப்பாணம்
போன்: 23631

★

வசந்தா
ஸ்ரோர்ஸ்
280. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

★

த சென்றல்
பிறைன்ஸ்
கொம்பனி லிமிட்டட்
யாழ்ப்பாணம் - கிளை
250, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24360

★

ஸ்ரீபத்மநாதா
ஸ்ரோர்ஸ்
105, கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ராதா மின்சார மருந்து
ராதா குரு தைலம்
ராதா மணிமார்க் சந்தனாதி தைலம்
ராதா மணிமார்க் கேசரோக நிவாரண தைலம்
ராதா பிரமி கூந்தல் தைலம்
ராதா ஓம வாட்டர்

மற்றும் சகலவிதமான சித்த ஆயுள்வேத மருந்துகளும். எண்ணெய் வகைகளும் நம்பிக்கையாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி

53, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 22541
160, செட்டியார் தெரு, கொழும்பு-11. போன்: 35825

## இன்று இந்தியாவின் 38-வது சுதந்திரதினம்

# விண்வெளி விமானவியல் துறைகளில் இந்தியா துரித வளர்ச்சி!



ஸெயில்சிங்



ராஜீவ்

உலகம் முழுவதும் வியந்து போற்றும் வகையில் 38 வருடங்களுக்குமுன்னர் 'சாத்வீக' வழிநின்று இந்தியா தன்னை ஒரு சுதந்திர நாடாக்கியது.

ஆனால் அந்த 'சாத்வீக' வெற்றி அதனை ஒரு 'சாது' வான நாடாக்கிவிடவில்லை. சுதந்திரம் பெற்றதிலிருந்து அதன் வளர்ச்சி காத்திரமானதாகவும் சர்வதேச சவால்களை எத்துறைகளிலும் ஏற்கக்கூடியதுமாக விளங்கிவந்துள்ளது.

இத்தகைய அபரிமித வளர்ச்சிக்கு இந்தியத் தலைவர்களதும் கல்விமான்களினதும் ஒப்பற்ற தேசாபிமானப் போக்கே முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

நவஇந்தியாவின் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிகள் சர்வதேச அரங்கில் அதனை ஒரு வல்லரசாகவே மாற்றிவிட்டுள்ளது.

3ம்உலகநாடுகளில் முதன்மை மிக்கதாக விளங்கும் இந்தியா அந்நாடுகளின் வளர்ச்சிக்கு ஒரு முன்னுதாரணமாகவும்காணப்படுகின்றது.

விண்வெளி ஆராய்ச்சித் துறையில் இந்தியா பல ஆக்கபூர்வமான திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது.

அபிவிருத்தியடைந்து வரும் ஒருநாடான இந்தியா, விண்வெளித்துறையில் அதிக செலவினங்களைமேற்கொள்ளவேண்டுமா? என்பது பலரது கேள்வியாக உள்ளது.

ஆனால் இந்திய விண்வெளி ஆராய்ச்சியின் நோக்கம் மிகவும் உயர்ந்த தொன்றாகவும், விரிவான அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றது.

### இன்சாக்ட் செயற்கைக் கோள்

1960ம் ஆண்டுகளின் இறுதிப் பகுதியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சிகள் விரிவுபடுத்தப்பட்டன. இன்று விண்வெளிக்கு ஒரு இந்தியரை (ராகேஷ் சர்மா)அனுப்பிவைத்துள்ளதுடன் 'இன்சாக்ட் 1-பி' என்ற (Insact 1-B) பலநோக்குச் செயற்கைக்கோளையும் இந்தியா விண்ணில் மிதக்கவிட்டுள்ளது.

இச்செயற்கைக்கோள்கடந்த ஒரு வருடகாலமாக விண்வெளியில் இயங்கிவருகிறது. தொலைதொடர்பு, நேரடித் தொலைக்காட்சி சேவை, ஒலிபரப்பு, வானிலைத் தகவல்களைப்பெறல் என்பனவற்றில் இந்த செயற்கைக்கோள் பெருமளவு துணை புரிந்துவருகின்றது.

இந்தியா விண்வெளித்துறை ஆய்வுக்கென மேலும் ஒரு 5வருடத் திட்டமொன்றை வகுத்துள்ளது. இத்திட்டத்தின்படி அமெரிக்க விண்கலத்தில் ஒரு இந்தியரை அனுப்புவதும், இன்சாக்ட்-1-C என்ற மேலும் சக்தி கூடிய செயற்கைக் கோளை விண்வெளிக்கு அனுப்புவதும் இந்தியாவின் பிரதான நோக்கங்களாகும்.

— பா. அனந்தகிருஷ்ணன் —

இந்தியாவின் இவ் விண்வெளி ஆராய்ச்சியின் பிரதான நோக்கம், நீண்டுவிரிந்த இந்தியத் துணைக்கண்டத்தை சமூக-பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதேயாகும். இராணுவ அல்லது வேறு அழிவு நோக்கங்களை இத் திட்டம் கொண்டிருக்கவில்லை,

1990ம் ஆண்டுகளில் இந்தியா சுயமாகவே ராக்கெட்டுக்கள் மூலமாக அதன் சொந்தச் செய்மதிகளை விண்வெளிக்கு அனுப்பிவைக்கும் ஆற்றலையும்பெற்றுவிடும். தற்போது அமெரிக்கா, ரஷ்யா ஆகியவற்றின் உதவியையே இப்பணிகளில் அது நாடிநிற்கின்றது.

### விமானத் தயாரிப்பு

விமானத் தயாரிப்புத் தொழில் நுட்பத்திலும் இந்தியா துரிதமாக முன்னேறி வருகின்றது.

கடந்த ஜூன் மாதம் இந்தியாவின் 'அசோக்' என்ற விமானம் பிரான்ஸ் விமானக் கண்காட்சியில் பார்வையாளர்கள் பிரமிக்கும்வகையில் வானத்தில் சாகஸங்களைப் புரிந்தது.

இச்சாகஸங்கள் இந்திய விமானத் தயாரிப்புத் தொழில் நுட்பம் சர்வதேச ரீதியில் உயர்ந்துள்ளதை வெளிப்படுத்தியது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் மிகப்பெரும் விமானத் தயாரிப்பு கைத்தொழில் நாடாக இந்தியா விளங்குகிறது.

### ஹிந்துஸ்தான் விமான கம்பனி

ஹிந்துஸ்தான் விமானத் தயாரிப்பு கம்பனி இந்தியாவின் மிகப்பெரும் விமானத் தொழில்நுட்பநிறுவனமாகும். (Hindustan Aeronautics Limited .

இந்நிறுவனம் இந்தியாவில் பத்து கிளைகளைக் கொண்டுள்ளது. தலைமையகம் உட்பட 5 கிளைகள் பங்களூரில் உள்ளன. ஏனையவை ஆங்காங்கே பரந்துள்ளன.

இந்த நிறுவனத்தின் முதலாவது தயாரிப்பு 'புஷ்பக்' என்ற இரு இருக்கைகள் கொண்ட சிறிய விமானமாகும்.

இரண்டாவது 'கிறிஷக்' என்ற விமானம். இது சீரற்ற ஓடு பாதைகளிலும் இறங்கக்கூடியது. விமானப் பயிற்சி, மற்றும் ஆகாய மார்க்கமான உதவிகள், விமானப் படப்பிடிப்புகளுக்கு [Aerial Photography] உதவுகின்றது.

'கிரான்' என்பது மூன்றாவது ரகமாகும். இது ஒரு போர் விமானமாகும். சிறிய அளவிலான தாக்குதலுக்கு இது பயன்படுத்தப்படுகின்றது.

'மருட்' என்ற நான்காவது ரக விமானம் சுப்பர் சோனிக் வலுவுடையதாகும். முற்றிலும் இந்திய தயாரிப்பான ஒரு நவீன போர் விமானமாக இது விளங்குகின்றது.

இலக்குகளை விரைந்து தாக்கும் சக்தி கொண்டதாகவும், ஏனைய வெளிநாட்டுப் போர் விமானங்களுக்கு இணையானதாகவும் இது காணப்படுகிறது.

இவற்றைவிட சோவியத்தின் 'மிக்' விமானம், பிரிட்டனின் 'ஜகுவார்', பிரான்ஸின் 'மிராஜ்' விமானங்களையும் அந்நாடுகளின் கூட்டுத் தொழில் நுட்ப ஆலோசனைகளுடன் இந்தியா தயாரித்து வருகின்றது.

இவ்விமானத் தயாரிப்புகள் இராணுவ பாவனைக்குரியனவாகவே காணப்படுகின்றன. இருந்த போதிலும் இந்த விமானங்களைத் தயாரிப்பதற்கான தொழில் நுட்ப அறிவு-உதவி என்பவற்றின் மூலம் விமானத்தயாரிப்பு தொழிலில் மேலும் விருத்தியடைவதே இந்தியாவின் பிரதான நோக்கமாகும்.

### ஆசைகொண்ட விமானி

விண்வெளி- விமானவியல் வளர்ச்சிக்கு உரமூட்டுவதாக முன்னாள் விமானியான இந்திய பிரதமர் திரு. ராஜீவ்காந்தி விளங்குகின்றார்.

இவர் அரசியல் வாதியாக வரமுன்னர் கூடுதல் தொழில் நுட்பம் மிக்க விமானங்களைச் செலுத்தும் விமானியாகவே வரவிரும்பினாராம். [More Sophisticated Jets)

ஆனால் இந்தியாவின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்கவேண்டிய நிர்ப்பந்தம் அவரது அந்த ஆசையை நிறைவேற்றவில்லை.

இருந்தபோதிலும் அந்த இளம் முன்னாள் விமானியின் மேலும் உயரவேண்டுமென்ற ஆசை, இந்தியாவின் சகல துறைகளிலும் இழையோடி, ஈடிணையற்ற 'நவ பாரதத்தை' சிருஷ்டிக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. ★

---

## உபகரணங்கள் இராணுவ முகாமுக்கு செல்லப்பட்டன

(மன்னார்)

மன்னார் செயலகத்திலுள்ள முக்கிய உபகரணங்கள் இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன

யாழ். செயலகத்தில் இடம் பெற்ற கொள்ளைச்சம்பவத்தைத் தொடர்ந்து பாதுகாப்புக்கருதி இந்த நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துள்ளதாக மன்னார் அரசாங்க அதிபர் ஜனாப் எம். எம். அப்துல்காதர் தெரிவித்துள்ளார். (மா)

## கள்ளமண் ஏற்றியவர் அகப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

களவாக மண் ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் ஒருவர், நேற்று முன்தினம் மாலை யாழ். சத்திரச்சந்தியில் இளைஞர்களிடம் சிக்கிக்கொண்டார்.

லாண்ட்மாஸ்ரர் ட்ராக்டர் ஒன்றில் அவர் ஏற்றப்பட்டு பஸ்நிலையம் வழியாக ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டபோது, வீதியில் நின்ற ஏராளமானோர் பார்வையிட்டனர். (க)

## சேவை நலன் பாராட்டு விழா

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும், கடந்த 16 ஆண்டுகளாகச் சேவை புரிந்த திரு. செ. சபாரத்தினம் அண்மையில் ஓய்வு பெற்றுள்ளதை அடுத்து சேவை நலம் பாராட்டு விழா ஒன்று நடத்தப்பட்டது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடாத்திய இவ்வைபவத்திற்கு கல்லூரியின் புதிய அதிபர் திரு. க. சிவசுப்பிரமணியம் தலைமை தாங்கினார்! தலைமையுரையின்போது அவர், "திரு. சபாரத்தினம் ஆசிரியர், உப அதிபர், அதிபர் பதவிகளை வகித்து இக்கல்லூரியின்வளர்ச்சிக்கும் சிறப்புக்கும்தொடர்ச்சியான பங்களிப்பினைச்செய்துள்ளார். வரலாறு, பொருளியல் ஆகிய சமூக விஞ்ஞானத்துறையில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று உயர்வுறச் செய்த நல்லாசிரியர். ஒழுக்கசீலராகவும், சிறந்த நிர்வாகியாகவும் விளங்கி அத்தியார் இந்துக் கல்லூரியின் வரலாற்றின் ஒரு மைல் கல்லாக வழி காண்பித்தார்." என்று கூறினார்.

கோப்பாய் கல்வி வட்டார அதிகாரி திரு. தங்கராசா, பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. த. சுப்பிரமணியம், கல்லூரி உப அதிபர் திரு. வ. செல்லத்துரை ஆகியோர் உட்பட பலர் ஓய்வுபெற்ற அதிபரின் சேவை நலன்களுக்குப் பாராட்டுரை வழங்கினார்கள்.

## 86 சிங்களப் பொலிஸார் யாழ்ப்பாணம் வருவார்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் பெற்றுள்ள 86 தமிழ்ப் பொலிசாருக்கு பதிலாக 86 சிங்களப் பொலிசார் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படவிருக்கின்றார்கள்.

இடமாற்றம் பெற்ற தமிழ் பொலிசார் தங்கள் இடமாற்றத்தை பின்போடச்சொல்லி தலைமைப் பீடத்திற்கு விண்ணப்பித்திருப்பதாக கூறப்படுகிறது.

இதேசமயம்பொலிஸ்பயிற்சி கல்லூரியில் இருந்து 30சிங்கள பொலிசார் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படவிருப்பதாகவும் கூறப்படுகிறது. (க)

## திருமலையில் தமிழர்கள் தாக்கப்பட்டனர்

(திருகோணமலை)

கந்தளாயிலிருந்து திருகோணமலைக்கு வந்த பஸ் ஒன்று தாக்குதலுக்குள்ளானது

இந்த பஸ்ஸிலிருந்த தமிழர்கள் வாளால் வெட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. (க)

## ரூபவாஹினி

மாலை

| | |
|---|---|
| 5-00 | செய்திகள் |
| 5-05 | சிறுவர் நிகழ்ச்சி |
| 5-10 | 'காட்டூன்' |
| 6-30 | செய்திகள் (தமிழ்) |
| 6-50 | காலங்கள் (தமிழ் நாடக நிகழ்ச்சி) |
| 7-25 | சிங்களத் தகவல் நிகழ்ச்சி |
| 8-00 | செய்திகள் (சிங்களம்) |
| 8-25 | 'சதுட கண்டுல' (சிங்கள நாடக நிகழ்ச்சி) |
| 9-00 | செய்திகள் |
| 9-20 | 'கொமெடி சீரிஸ்' |
| 9-50 | காதம்பரி (தமிழ்) |
| 10-15 | கொரியாவின் தேசிய தினம் |
| 11-45 | ஒளிபரப்பு முடிவு: |

## முதலுதவிப்பயிற்சி இன்று ஆரம்பம்

[கரவெட்டி]

சென். ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவினால் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கெனப் புதிய முதலுதவிப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன

புதிய வகுப்பு இன்று வியாழக்கிழம நண்பகல் கட்டைவேலி ஞானசாரியன் கல்லூரியில் இப்படைப்பிரிவின் பகுதி அத்தியட்சகர் திரு. என். போஜனால் ஆரம்பித்துவைக்கப்படும்.

## இராணுவ

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மில் வட்டுக்கோட்டை, இணுவில், நெடுந்தீவு, தும்பளை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களும் வேலைக்கு விடப்பட்டார்கள் என்றும் அவர்கள் எந்தவித மறுப்பும் தெரிவிக்காமல் வேலையில் ஆர்வத்துடன் ஈடுபடுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வேலை இழந்த பண்டத்தரிப்பு வாசி கடந்த 4ம் திகதி இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

யாழ் நகரில் நடந்தது

# $1\frac{1}{2}$ லட்சம் பெறுமதியான பற்றறிகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரிலுள்ள ஒருபற்றறி கடைக்களஞ்சியத்தில் கடந்த ஞாயிறு காலை சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியுள்ள 113பற்றறிகள்கொள்ளையடிக்கப்பட்டது.

யாழ். தபால் நிலையத்திற்கு சமீபத்திலுள்ள இக்களஞ்சியத்திற்கு சம்பவதினம் காலை 7 மணியளவில் யந்திரதுப்பாக்கியுடன் சென்ற இரு இனந்தெரியாத இளைஞர்கள் தங்களுக்கு அவசியம் பற்றறி தேவை என்று கேட்டதாகவும் அங்குநின்றவர் கடைத்திறப்பு வீட்டில் இருப்பதாகவும் காலை 8 மணிக்குத் தான் திறப்புக் கொண்டுவரப்படும் என்று தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

களஞ்சியத்தை உடைத்து திறந்து வான்ஒன்றில் 113 பற்றறிகளை எடுத்துச் சென்றதாக மேலும் கூறப்படுகிறது.

இந்தபற்றறிகளில் 43 பற்றறிகள் ஒவ்வொன்றும் 2000 ரூபா பெறுமதியுள்ளதென்றும் கூறப்படுகிறது.

இவை கடனுக்கு வாங்கிய பற்றறிகள் என்று அங்குநின்றவர்கள் கெஞ்சிக்கூறிய போதும் அவர்கள் பற்றறிகளைகொண்டு சென்றதாக கூறப்படுகிறது. (ஈ)

# பஸ்ஸுக்கு நின்றவரிடம் 20,000 ரூபா அபகரிப்பு!

(பண்டத்தரிப்பு)

கொக்குவில், தாவடி பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ்சுக்காக காத்துநின்ற பண்டத்தரிப்பை சேர்ந்த ஒருவரிடமிருந்து மோட்டார் சைக்கிளில் வீதியால் வந்துகொண்டிருந்தஇரு வாலிபர்கள் 20 ஆயிரம் ரூபாவை றிவோல்வரைக் காட்டி பயமுறுத்தி அபகரித்துச் சென்றுள்ளனர்.

பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் வீதியைச் சேர்ந்த திரு. ஜி ஜெயசிங்கம் என்பவரின் பணமே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளது.

கடந்தவியாழக்கிழமையன்று காலை 11 மணியளவில் கொக்குவிலுக்கு சென்ற இவர் அங்குள்ள நண்பர்ஒருவரிடமிருந்து தமக்கு வரவேண்டிய 20 ஆயிரம் ரூபா பணத்தை பெற்றுக் கொண்டு வீடுதிரும்புவதற்காக தாவடி பஸ்தரிப்பு நிலையத்தில் நின்றாராம்.

அப்போது வீதியால் மோட்டார்சைக்கிளில்சென்றுகொண்டிருந்த மேற்படி இருவாலிபர்கள் திரும்பி வந்து இவரை விசாரணை செய்தார்களாம். பின்பு கையில் என்னவைத்திருக்கிறீர் என்று கேட்டபோது தான் நண்பர்ஒருவரிடமிருந்து 20 ஆயிரம் ரூபா வாங்கிகொண்டு வந்துள்ளதாகவும், இது பற்றி அறிய வேண்டும் என்றால் குறிப்பிட்டவீட்டில்போய் நேரில் விசாரிக்கலாம் என்றாராம். அப்போது மோட்டார் சைக்கிளில் ஏறும் என்று சொல்லி அவரைவேறுபாதையால் கூட்டிச்சென்று ஒழுங்கை ஒன்றில் வைத்து அவரை இறக்கி றிவோல்வரைக் காட்டி பயமுறுத்தி 20 ஆயிரம் ரூபா பணத்தை பறித்துக் கொண்டு படுவேகமாக மோட்டார் சைக்கிலில் ஒடி மறைந்து விட்டார்களாம்.

NIRU TUITION CENTRE
STATION ROAD, KONDAVIL.

A/L 86

பிரயோக கணிதம்
காவிகள்
தூயகணிதம்
ஆள்கூற்று கேத்திரகணிதம்

ஆசிரியர்: A. பத்மநாதன்

ஆரம்பம்: 15-08-85 (வியா. காலை 8-00 மணி)

மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ்
பிரயாணங்கள்
ஆகஸ்ட் 22, 29–ந் திகதிகளில்
ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.
மற்றும்
சகல விமான டிக்கட்டுகளுக்கும்
பாஸ்போட், பொண்ட், விசா
என்பனவற்றிற்கும்
லிப்ருஸ் லிமிட்டெட்
(R. G. பில்டிங்)
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கொழும்பில்
LIBRAS LTD.,
(TRAVELS DEPT.)
24, PAUL VI CENTRE.
COLOMBO-1.

நாவற்குழி

## சித்திவிநாயகர் கொடியேற்றம்

(நாவற்குழி)

நாவற்குழியூர் சித்திவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பதினைந்து தனங்கள் திருவிழா நடைபெற்று 30-ந் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் உற்சவம் நிறைவு பெறும்.

## இல்லம் அன்பளிப்பு

(நாவற்குழி)

நாவற்குழியூர் சித்திவிநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான வடக்கு வீதியில் உள்ள காணியில் கலாநிதி வெற்றிவேல் திருஞானசம்பந்தர் தமது தாயாரின் நினைவுச் சின்னமாக சகல வசதிகளும் அமைந்த இல்லம் ஒன்றை அமைத்து சித்திவிநாயகர் தேவஸ்தானத்திற்கு வழங்கியுள்ளார். இந்த இல்லம் ஆலயத்தின் குருக்கள் வசிப்பதற்கு வழங்கப்படும்.



## தலைவராகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் தலைவராக யாழ். பல்கலைக்கழக மாணவன் இ. ராஜ்குமார் ஏகமனதாகத் தெரிவு செய்யப் பெற்றுள்ளார். நல்லூர் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் தலைவரான இவர் கிறிக்கட், உதைபந்தாட்டம், மெய்வல்லுனர்ப் போட்டிகளில் கழக விருது பெற்றவர். இவ் இளைஞர் முன்னேற்றக் கழகம் ஒரு புதிய அமைவாக செயல்பட முடிவுசெய்து முதல் தலைவராக இவர் தெரிவு செய்யப்பட்டார். நோதேர்ண் ஸ்போட்ஸ் கழகத்தின் அங்கத்தவரான இவர், நோதேர்ண் ஸ்போட்ஸ் சஞ்சிகையின் சிறப்பு ஆசிரியராகவும் கடமை புரிகிறார். சுப்பர் ஸ்ரார் விருதுகள் பெற்ற இவர் கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் சிறப்பு பரிசில்களைப் பெற்றுள்ளார். யாழ். இந்துக் கல்லூரியில் 82-ம் ஆண்டு வணிகத்துறையில் சிறப்புப்பேறு பெற்றவர். யாழ். மாவட்ட திரிசாரண குழு 'நல்லூர்' விளையாட்டுப் பொறுப்பதிகாரியாக கடமை புரிகிறார். சாரண தலைவர்களுக்கான அவந்தை 1 பெற்ற சாரண தலைவர் ஆவார். சென் ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஆகியவற்றின் அங்கத்தவராகவுமுள்ளார். (மா)

## புதிய உதவி அரசாங்க அதிபர்!

(யாழ்ப்பாணம்)

வவனியா மாவட்ட தமிழ்ப் பிரிவு நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபராக திரு பேரம்பலம் பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வவனியா திட்டமிடல் பகுதியில் ஏழு ஆண்டுகள் கடமை ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# கடைகளை சிங்கள அகதிகள் உடைத்து திருட்டு

(வவனியா)

வவனியா புத்த விகாரையில் அகதிகளாக உள்ள சிங்கவர்கள் கடந்த சனிக்கிழமை கண்டி வீதியில் இரண்டு பிரபல கடைகளை பட்டப்பகலில் உடைத்து கொள்ளை அடித்தனராம்.

பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான உணவுப்பொருள்களை கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வவனியா பிரஜைகள் குழுவுக்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேங்காய் விலை திடீர்ச்சரிவு!

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் சந்தையில் தேங்காயின்விலை 50 சதமாக குறைந்துவிட்டது!

சிறிய தேங்காய் 50சதமாகவும் பெரியளவு தேங்காய் 70 சதம் முதல் 80 சதமாகவும் விற்கப்படுகிறது

சந்தைக்கு உள்ளூரிலிருந்து பெருமளவு தேங்காய் வந்திருந்தது. (ஈ)

# இன்றைய பலன்

மாதம்: ஆடி
திகதி: 31 15-8-1985)
கிழமை: வியாழன்
திதி: சதுர்த்தசி பி. ப. வரை
நக்ஷத்திரம்: பூசம்
பி. ப. வரை

மேடம்: முயற்சியால் முன்னேற்றம் உண்டு பாராட்டுதலுக்கும் இடமேற்படும். சிலருக்கு இடமாற்றத்திற்கும் இடமுண்டு.

இடபம்: பொருள் ஈட்டுவதில் புதிய பாதைகளைக் கையாளுவீர்கள். எதையும் சிறப்பா செய்வீர்கள். விருந்தினர் வருகைக்கும் இடமுண்டு.

மிதுனம்: குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கி மறையும். மனதில் அமைதி குன்றும். ஆத்திரமும் அதிகரிக்கலாம்.

கடகம்: இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தை தடுக்கும். இதய பாரம் வேதனைப்படுத்தும். திடசித்தம் வேண்டும்.

சிங்கம்: புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும் ஆதரவுக்கும் இடமுண்டு. சொத்து விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும்.

கன்னி: பணம் பறிபோவதற்கு இடமுண்டு. முகமன் பேசுவோர் விடயத்தில்எச்சரிக்கையுடன் இருக்கவும். இன்று பிரயாணத்தைப் பின்பொடவும்.

துலாம்: படித்தவர்கள் மூலம் பயனடைவீர்கள் தாய் வழிப்பெருமையும் உண்டு. சிலர் புதுமனை கட்டுவதற்கும் ஆலோசிக்கலாம்.

விருச்சிகம்: தாராள மனப்பான்மையின் மூலம் பணம் செலவாகும். புத்திர மகிழ்ச்சிக்கு இடமுண்டு அறவழிகளிலும் மனநாட்டம் செல்லும்.

தனுசு: எதையும் முன்னணியில் நின்று செய்வதை பின்போடவும். பின்னணியில் பிளவுக்கு இடம் உண்டு. பொறுமையும் விரும்பத்தக்கது.

மகரம்: களஸ்திர வழியால் கனிவான சம்பவங்களுக்கு இடமுண்டு. வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் உண்டாகும்.

கும்பம்: விபத்திற்குஇடமேற்படும் எதிலும் நிதானமாக நடந்துகொள்ளவும். பல வழிகளிலும் பணம் செலவாகும்.

மீனம்: பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும் தெய்வத்தின் அருளும் உண்டு. எதிர்பாராத வரவும் உண்டு.

திருமலை
– வே. ரவீந்திரன் –

## இறந்தவர் குடும்பங்களுக்கு நிதியுதவி

[யாழ்ப்பாணம்]

வவனியாவில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது பூந்தோட்டப்பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியான 8பேருக்கும் தலா 500ரூபா புனர்வாழ்வு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

வவனியா பிரஜைகள் குழுத் தலைவர் திரு என். எம் எக்ஸ் சொர்ணபாலா பலியானவர்களின் குடும்பங்களுக்கு இந்த நிதியை வழங்கினார்.

வவனியாவில் கடந்த வெள்ளிக்கிழமை10 பேர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே. (மா)

## சுந்தரரின் நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

அடங்காத் தமிழன் அமரர் சி. சுந்தரலிங்கத்தின் வவனியாவிலுள்ள இல்லத்தில் இருந்த சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதிக்க புத்தகங்கள் அனைத்தும் மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்க நூல்நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் சிங்கப் பூரில் இருக்கும் திருமதி சுந்தரலிங்கத்துடனும் அவரது புதல்வன் சத்தியலிங்கத்துடனும் நூல்கள் பெறுவது சம்பந்தமாக கடிதத்தொடர்பு கொண்டிருந்தார்.

அன்பளிப்புச் செய்யப்பட்ட நூல்களுள் பெரும்பாலானவை பாராளுமன்ற விவாதக் கோவைகளும் சட்ட நூல்களும் அடங்கும் என்றும் இந்த நூல்களின் பெறுமதி சுமார் பத்தாயிரம் ரூபாவுக்கு மேலிருக்கும் என்றும் திரு. பாஸ்கரன் தெரிவித்தார். (ச-மா)

## வீதிகள் திருத்தம்

[சாவகச்சேரி]

நாவற்குழியில் இருந்து பளை வரையிலான கண்டி வீதியிலுள்ள சிறிய பள்ளங்கள் நிரப்பப்பட்டு தார் ஊற்றப்பட்டு வருகின்றன.

இவ் வீதிகளிலுள்ள கண்ணி வெடிகளின் போது தகர்க்கப்பட்ட பள்ளங்கள் நிரப்பபடாமல் இருப்பது வாகனங்கள் மற்றும் சைககிள்கள் செல்வது கஷ்டமாக விருப்பதை பொதுமக்கள் பலரும் பேசிக் கொள்கின்றனர். இப் பள்ளங்களிற்கு அருகில் கற்கள் குவிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடதக்கதாகும்.

## கார் கடத்தல்

(வவனியா)

வவனியாவிலுள்ள குழாய்க் கிணறு தோண்டும் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பொறியியலாளர் ஒருவருடைய சொந்த கார் பூந்தோட்டம் என்ற இடத்தில வைத்து இனம் தெரியாத சில இளைஞர்களினால் கடத்தி செல்லப்பட்டுள்ளது.

சின்னப்புதுக் குளத்தில் உள்ள வவனியா வர்த்தகர் ஒருவருடைய மோட்டார்சைக்கிள் ஒன்றும் நான்குஇளைஞர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30 2-30, 6-00
சிவகுமார்-நகேஷ்
தேன் சிந்துதே வானம்
(புதிய பிரதி)

ஹரன் சினிமா
10-30, 2-30
ஜெய்சங்கர்—பானுமதி
மேஜர் மீனாட்சி
(புதியபிரதி கலர்)

வின்ஸர் (யாழ்.)
Daily 10-30, 2-30, 6-25,
கமலஹாசன்-மாதவி
ராதா-சுலக்சனா-தேங்காய்
டிக்—டிக்—டிக்

ஸ்ரான்லி மினி
5'X5' திரைவானில்
10-30, 12-30, 2-30
4-30 6-30
RAID ON ENTEBBE
(அதிரடி தாக்குதல்)

லிபேர்ட்டி மினி
10-30. 12-30. 2-30. 4-45
TERROR
இரவு 7-00 மணிக்கு
INTIMATE MOMENTS
Adults Only

மேஃபெயர் மினி சினிமா
(கன்னாதிட்டி காளிகோவில் அருகில்)
10-30, 4-45, 7-00
"Basket Case"
தன் உடலில் ஒட்டிப் பிறந்த ஒரு அரை உருவம் கொண்ட பயங்கர ரகுலாவின் திகில் நிறைந்த கதை.

குமரன் மினி சினிமா
10-30, 2-30, 4-30, 6-30
Mosquito Squadren
(War Film)
இராணுவத்துக்கும் இளைஞர்களுக்கும் உள்ள போராட்டத்தைச் சித்தரிக்கும் படம்

வெலிங்டன்
10-30, 2-15, 4-30, 6-45,
திகதி: 14 - 15
THEATRE OF DEATH
16 முதல்
DRAGON DIES HARD
(புரூஸ்லியின் படம்)
முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் காட்டப்படுகிறது.

லிடோ சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக ஓடுகிறது!
தியாகராஜன், சிவச்சந்திரன், பூர்ணிமா, ஜெயராம், லிக்சுமிதா, ஜெய்சங்கர் நடித்த
பாலு மகேந்திராவின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்

பாலகன் V.V.
(சாந்தி முன்பாக)
Daily 5 Shows
WAR KILL

சரவணபவன் மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, 4-30 7-00
Private-Lessons
(கண்டிப்பாக வயது வந்தோருக்கு மட்டும்)

S.T.L. மினி சினிமா
திருநெல்வேலி
10-30, 2-15, 5-15
சிவாஜி—சாவித்திரி நடித்த
வணங்காமுடி
18 முதல்
மன்னாதி மன்னன்

"லதா" மினி
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-45
சிரஞ்சீவி- சுஷாதா
சுரேஸ்பாபு
மீண்டும் கைதி

மொடேர்ன் மினி சினிமா
ஸ்ரீலங்கா [illegible]
ராஜாதியேட்டருக்கு அருகாமையில்
13-8-85 முதல்
தினசரி 10-30, 2-30, 4-30 6-45
காட்சிகள் மட்டும்
"IMMORAL TALES"
Adults Only

நியூ சினிமாலயா
R.G. பில்டிங் (மேல்மாடி),
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
10-30, 2-30, 4-30. 6-30
5x5 வெண்திரையில்
"Raid Party"
பார்க்கப் பார்க்க வியப்பை உண்டுபண்ணும் கொறில வீரர்களின் சாகசங்கள் நிறைந்த படம்

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
Lee Van Cleef...
Code Name Wild Geese
மிக நவீன ஆயுதங்களுடன் 5 கொமாண்டோக்கள் கொண்ட கொரில்லா கோஷ்டி இராணுவ முகாம் மீது தாக்குதல்

நியூ சாந்தி மினி
10-30. 2 30. 4-30, 6-30
Pending Greivences
(KILLING GIRLS)
இப்படம் இலங்கை காடுகளில் படமாக்கப்பட்டது இளம் பெண்களை கொலைசெய்து அவர்களின் உறுப்புகளை வெட்டி தின்னும் காட்டு மிராண்டி வேடர்களின் பயங்கரச் செயல் நிறைந்தது.
(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்.


## வன்முறை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"தற்போதைய சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் பிரதி விளைவுகளைப் பொருட்படுத்தாது நியாயமானதைச் செய்ய வேண்டிய தேவைப்பாடு தற்போது ஏற்பட்டுள்ளது.

'கடந்த ஜூன் மாதம் இலங்கை ஜனாதிபதிக்கும், இந்தியப் பிரதமருக்கும் இடையே ஏற்பட்ட சந்திப்பு. இலங்கையில் அமைதி ஏற்படுவதற்கு கிடைத்த ஒரு வாய்ப்பாக அமைந்தது.

'இந்தியா இலங்கைப்பிரச்னையில் இருதரப்பினருக்குமிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முயலும் ஒரு நடுநிலையான போக்கையே கொண்டுள்ளது.

'இந்தியாவின் நிலை அணி சேராக்கொள்கை, பஞ்சசீலத் தத்துவம் ஆகியவற்றைத் தழுவியவையாக விளங்குகின்றது

இலங்கையில் ஏற்படப் போகும் அமைதி, இந்தியாவுடன் பொருளாதார, கலாசார, தொழில்நுட்பத்துறைகளில் நிச்சயம் மேலும் பிணைப்பை ஏற்படுத்தும் என்றே நம்புகின்றேன்.

'இந்திய - இலங்கை உறவில் 1985-ம் ஆண்டு நிச்சயம் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்குமென்பது எனது மனப்பூர்வமான நம்பிக்கையாகும்.''

(கி)

## நஷ்டஈடு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பாலசுப்பிரமணியம் கோரியிருந்தார். இதுபற்றி சட்டமா அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அரச சட்டத்தரணி கேட்கப்பட்டிருந்தார்.

சட்டமா அதிபருடன் தொடர்புகொண்டதாகவும், இந்திய மீனவருக்கு வழங்க வேண்டிய சேதம் பற்றி ஆலோசிக்கப்படுவதாகவும், தவணை தருமாறும் அரச சட்டத்தரணி தெரிவித்தார்,

அடுத்த மாதம் 25ம்தேதிக்கு வழக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது. [க]

## சுவிஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்னைகளைத் தேடிக்கொள்கிறார்களே தவிர அரசு இவர்களுக்குப் பிரச்னை கொடுப்பதில்லை என்று தெரிவித்தார்.

## ஆங்கில...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலைக் கழகத்தில் நடைபெறவிருக்கும் சகல பரீட்சைகளும் (இரண்டாம் வருட பரீட்சை உட்பட) குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறும்.

இந்தப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில், வங்கிக்கடன் ஆகியவை திறுத்தப்படும் என்றும் துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

புதிய மாணவர்கள் நேற்று பல்கலைக்கழகம் வந்தபோது பழைய மாணவர்கள் மறியல் போராட்டம் நடத்தியதும், இதன் காரணமாக புதிய மாணவர்களின் பரீட்சைகள் தடைப்பட்டது குறித்தும் துணைவேந்தர் பெரும்வருத்தம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில்; புதிதாக அனுமதி பெற்ற மாணவர்கள் இன்று பல்கலைக்கழகத்துக்கு சமூகமளித்தார்கள் என்றும் அவர்களை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சிரேஷ்ட மாணவர்கள் எவ்வித ருக்கிங்கோ, துன்புறுத்தலோ செய்யாது இன்முகத்துடன் வரவேற்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ரொமேஷ்ஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திம்பு பேச்சு வார்த்தை முற்றுப் பெறாமலே முடிந்துவிடும் நிலையைத் தவிர்க்க, பிரதமர் திரு. ராஜீவ்காந்தி உடனடி நடவடிக்கை மேற்கொண்டார் என்றும் இதன் பலனாகவே இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி அவசர அவசரமாக இன்று திம்பு விரைகிறார் என்றும் மகாநாட்டுடன் தொடர்புள்ள வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

"பலருக்கும் அகதிகளுக்குரிய செலவுப்பணமும் வழங்கப்படுகிறது. சிலர் சட்டரீதியாகவும் சிலர் சட்ட விரோதமாகவும் வேலைசெய்து பணம் சம்பாதிக்கிறார்கள். இலங்கையில் இனப்பிரச்னை தீர்க்கப்பட்டு நல்ல சூழ்நிலை உருவாகும் வரை சுவிற்சர்லாந்திலிருந்து தமிழர்கள் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்" என்றும் திரு. கிறீன் போர்க் தெரிவித்தார்.

## 35 மீனவர்களை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடற்றொழிலாளர் திருகோணமலையிலிருந்து சென்று கொண்டிருந்தபோது கடத்திச் செல்லப்பட்டனர்.

அமைச்சர் தமது வேண்டுகோளில்; 11-ம் தேதி. இனந்தெரியாத இளைஞர்களினால் இந்தக் கடற்தொழிலாளர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்திருக்கிறார்.

இந்த மீனவர் சமுதாயத்தில் இன, மத மொழி வேறுபாடுகள், கிடையாதென்றும் தீவிரவாத நடவடிக்கைகள் எதனையும் இவர்கள் மேற்கொள்ளவில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அமைதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர்.

இதன் பிரதிகளை. பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா ஆகியோருக்கும் அனுப்பிவைத்துள்ளனர்,

அந்தச் செய்தியில் இந்நாட்டின் சகல மக்களின் உரிமைகளும் கௌரவிக்கப்படும் விதத்தில் நாட்டுப்பிரச்னை தீர்த்து வைக்கப்படவேண்டும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# யாழ். அபிவிருத்திச் சபை

# அறிவித்தல்

1985-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09-ம் திகதி காலை 10-00 மணிவரை யாழ். அபிவிருத்திச் சபை பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலை) அவர்களால் கீழே காட்டப்பட்ட வேலைகளுக்கு, பெருந்தெருக்கள் திணைக்களம், கட்டடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அரசாங்கத் திணைக்களங்கள்/கூட்டுத்தாபனங்களில் கீழ்க் காட்டப்பட்ட வேலைகளின் எதிரே காட்டப்பட்ட தொகைக்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றையதினம் காலை 10-10 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் வைப்புப் பணத்தையும் கிரயப் பணத்தையும் சம்பந்தப்பட்ட யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகத்தில் செலுத்துவதன் பெயரில் 1985-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02-ம் திகதி நண்பகல் 12 00 மணிவரை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்;

| | யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகங்கள் | வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்ட தொகை (தகமை) | வைப்புப் பணம் | கிரயப் பணம் |
|---|---|---|---|---|---|
| (01) | நாரந்தனை | புளியங்கூடல் சந்தைக் கட்டடம் அமைத்தல் | 50,000/- | 50/- | 25/- |
| (02) | சுன்னாகம் | கொல்களம் அமைத்தலும் அதைச்சுற்றி சுவர் கட்டுதலும் | 50,000/- | 50/- | 25/- |
| (03) | செம்பியன்பற்று | நூல் நிலையக் கட்டடம் [illegible] அமைத்தல் | 50,000/- | 50/- | 25/- |
| (04) | கிளிநொச்சி | நூல் நிலையக் கட்டடம் அமைத்தல் | 150,000/- | 75/- | 50/- |
| ((05) | கொக்குவில் | நூல் நிலையம் அமைத்தல் | 125,000/- | 125/- | 25/- |
| 06) | கொக்குவில் | ஆடியபாதம் சந்தை அமைத்தல் | 40,000/- | 50/- | 25/- |
| (07) | நல்லூர் | நல்லூர் உப அலுவலகம் அமைத்தல் | 250,000/- | 200/- | 50/- |
| (08) | கிளிநொச்சி | முள்ளிப்பத்தில் 2 கடை அமைத்தல் | 30,000/- | 50- | 25/- |

அன்ரன் அல்பிரட்
(ஒப்பம்)
பிரதிச் செயலாளர் (நிர்: சட்: வே)
யாழ். அபிவிருத்திச் சபை.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
12 ஆகஸ்ட், 1985.

(64)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY




# மறியல் தொடருகிறது!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் நேற்று நான்காவது தினமாக நடந்த அடகு வைத்தோரின் மறியத் போராட்டத்தினுல், நேற்றும் வங்கிகள் திறக்கப் படவில்லை!

வங்கிக்கிளை வாசல்களில், அடகுவைத்தோர் சங்கப்பிரதிநிதிகளிடம் இதுவரை ஆயிரத்திற்கு மேற்பட்ட அடகுவைத்தோர் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் மட்டும் சுமார் 500 பேர் இதுவரை பதிவுசெய்துள்ளனர். நேற்றும் அடகு வைத்தவர்கள் தங்கள் பெயர், மற்றும் விபரங்களைப் பதிவுசெய்தனர்.

யாழ். நகரிலுள்ள 5 மக்கள் வங்கிக் கிளைகளிலும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் மறியல் செய்தனர். சில கிளைகளில் பெண்கள்தான் கூடுதலாகக் காணப்பட்டனர்.

அடகு நகைகள் கிடைக்கும் வரை தொடர்ந்து மறியல் நடைபெறும் என்று அடகு வைத்தவர்கள் தெரிவித்தனர்.

# திம்பு பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறும்

## 'இந்து' பத்திரிகைக்கு ஜே. ஆர். பேட்டி

(கொழும்பு)

திம்பு பேச்சுவார்த்தைகள் தோல்வியுற மாட்டாவென ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன 'இந்து' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பகிர்ந்தளிப்பை தமிழ் அமைப்புக்கள் ஏற்றுக் கொள்ளும் என்ற அடிப்படையிலேயே அவர் இவ்வாறு நம்பிக்கை கொண்டிருக்கிறார் என்றும், ஆனல் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைவதை அவர் ஏற்கத் தயாராய் இல்லை என்றும் இந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

சகல தரப்பினரையும் சந்திக்க வைத்தது இந்தியாதான். சம்பந்தப்பட்டவர்கள் இந்தியாவில் இருப்பதால் இந்த நிலைமை. இல்லையென்றால் இந்தியா இதில் தலையிட்டிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அவர்கள் தமிழர்கள், அவர்கள் எமது மக்களை கொலைசெய்கிறார்கள். ஒருதீர்வு ஏற்படுத்துவதில் இந்தியா பெரிய அளவில் உதவ முடியும் என்று திரு ஜெயவர்த்தன அந்தப் பேட்டியில் கூறியிருக்கிறார்.

சிங்களத்துடன் தமிழுக்கு சம உரிமை வழங்க முடியாது. தமிழ் தேசிய பாஷையாக இருந்துவருகின்றது. இந்த நிலையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொண்டுள்ளது என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

# 73 கடைகள் 19 வீடுகள் முற்றுக எரிந்து சாம்பல்!

(வவனியா)

வவனியாவில் நடந்த சம்பவத்தின் போது 73 கடைகளும், 19 வீடுகளும் முற்றுக எரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் தயாரித்த பட்டியல் மூலம் தெரிய வந்துள்ளது.

ஏழு கடைகள் அரைகுறையாக எரிக்கப்பட்டதாகவும், 3 கடைகள் உடைக்கப்பட்டதாகவும், 3 கடைகள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளதாகவும், அப்பட்டியலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

5 வீடுகள் அரைகுறையாக எரிக்கப்பட்டுள்ளதாகவும், 4 வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பூந்தோட்டம், குடியிருப்பு, வயிரவ புளியங்குளம், பகுதிகளிலேயே இச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

அரசாங்கக் கட்டடங்களான பால்சபை, மரவேலைப் பயிற்சி நிலையமும், இச் சம்பவத்தின் போது சேதமடைந்தன. (க)

# ஊர்காவல் படையினரின் துப்பாக்கிகள் அபகரிப்பு!

(வவனியா)

மதவாச்சி எல்லைப்புற ஊர்காவற் படையினரிடமிருந்து நேற்று முன்தினம் பல துப்பாக்கிகள் கொள்ளையடிக்கப் பட்டன.

ஊர்காவல் படையினருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இந்தத் துபபாக்கிகள் வழங்கப்பட்டிருந்தன.

இனந்தெரியாதவர்கள் திடீரென அங்குசென்று ஊர்காவல்படையினரிடமிருந்த 6 துப்பாக்கிகளைப் பறித்துச் சென்றனராம். (க

# மரண அறிவித்தல்

## அப்பாப்பிள்ளை சிவலிங்கம்

கந்தர்மடத்தைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை சிவலிங்கம் 13-08-85ல் காலமானார். இவர் சத்தியலட்சுமியின் அன்புக்கணவரும் சிவசாந்தி பஸ்பநாதன் (ஆசிரியை இராமனுதன் கல்லூரி), பரமசிவம் (ஜெர்மனி சிவசக்தி பகவத்சிங்கம், பராசக்தி (Music College Madras), சிவராஜி (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்), சிவராஜன், சிவநேசன் [ஜேர்மனி], சிவகாந்தன், சிவச்செல்வி ஆகியோரின் அன்புத்தந்தையும் புஸ்பநாதன் Saudi). பகவத்சிங்கம் (Tokyo Cement Corporation Ltd) ஆகியோரின் மாமனுரும், மௌலீஸ்வரியின் பேரனுமாவர். அன்னரின் ஈமக்கிரிகைகள் 17-08-85 சனிக்கிழமை காலை 10 மணியளவில் இல; 3, மணத்தறை வீதி, கந்தர்மடத்தில் நடைபெறும். 68

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் இளையதம்பி

(மலாயன் பென்சனர்)

மலாயன் பென்சனர் பொன்னம்பலம் இளையதம்பி காலமானுர்.

இவர் தெய்வானைப்பிள்ளையின் (யோகம்) அன்புக் கணவரும் சிவானந்தசேகரம் (மலேசியா), மகேந்திரன் (மலேசியா), நவநீதன் (London), பத்மாவதி, குகதாஸ் ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவபாதசுந்தரம் (C. T. B) யாழ்ப்பாணம் அவர்களின் அன்பு மாமனுரும் ஆவர். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (15-8-85) 4 மணியளவில் கைதடி ஊந்தல் மயானத்தில் நடைபெறும்.

உற்றூர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தகவல்: குகதாஸ்

கைதடி வடக்கு, கைதடி. 67

# ஒருவர் பலி

(வவனியா)

வவனியா பெரிய தம்பனைப் பகுதியில் இராணுவத்தினர் நேற்று நடத்திய சோதனையின் போதுசைக்கிளில் சென்ற ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர்.

வெங்கலச் செட்டிகுளம் என்ற இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி தியாகராசா (35 வயது) என்பவரே பலியானவர்.

இராணுவத்தினர் நேற்று முழுவதும அப் குதிகளில் சோதனையில் ஈடுபட்டிருந்தனர்

மதவாச்சியில் கடத்தப்பட்ட பஸ்ஸை கண்டுபிடிக்கும் பொருட்டே இச்சோதனை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. (க)

# இருதமிழ்ப் பெண்கள் ஆஸ்பத்திரியில்

(திருகோணமலை)

கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு வந்த பஸ்ஒன்று வழியில் 4ம் கட்டையடியில் சோதனையிடப்பட்டது.

இந்த பஸ்ஸில் வந்த இரு தமிழ் பெண்கள் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்பட்டு, பஸ் செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த இரு பெண்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (க)

# வாகனத்தை ஒப்படைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் தியாகி சிவகுமாரனின் சகோதரர் டாக்டர் சிவபாலனின் வான் இனந்தெரியாதவர்களினுல் அவரது மருத்துவமனையிலிருந்து கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

''வெளிநாடு செல்வதற்கு பல சந்தர்ப்பங்கள் இருந்தும் சொந்தமண்ணில் சேவை புரிய வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக எனதுமகன் டாக்டர் சிவபாலன் தமிழ் மக்களுக்கு சேவையாற்றி வந்தார்'' என்று தாயாரான திருமதி பொ அன்னலட்சுமி விடுத்தவேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

அரசினுல் எங்கள் குடும்பம் அனுபவித்த கஷ்டங்களையும் நஷ்டங்களையும் மக்கள் அறிவார்கள் என்றும் கடத்தப்பட்ட வாகனத்தை சிவபாலனின் இல்லத்தில் கொண்டு வந்து ஒப்படைக்குமாறு பணிவன்புடன் கோருவதாகவும் அவர் விடுத்த வேண்டுகோளில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# மினி வான்.-.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கப்பட்டது

இந்த மினிவானை மறித்த ஆயுதக் கோஷ்டியொன்று வானில் பிரயாணிகளை வெட்டியதாகவும் பலர் காயமடைந்ததாகவும் உத்தியோக பூர்வமற்ற செய்தி தெரிவிக்கிறது (க)

# மதவாச்சி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது

பஸ்களில் பெண்கள் சிறுவர்கள் உட்பட அதிகமான பரயாணிகள் இருந்தனராம்.

பஸ்கள் பற்றி இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை. (க)

# காவலூரில் குண்டுவெடிப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் நேற்று மாலை குண்டு ஒன்று வெடித்ததினுல் இளைஞர் ஒருவர் பலத்த காயமடைந்தார

# கொழும்பில் சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

அநுராதபுரத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி தெரிவித்து கொழும்பில் நேற்றுக் காலை 500 பௌத்தபிக்குகள் உட்பட சுமார் 1000 பேர் சத்தியாகிரகம் செய்தனர்

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திரு. தினேஷ் குணவர்த்தன, திரு ஹலிம் இஸாக், திரு. மைத்திரபால சேனநாயக்கா ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

பம்பலப்பிட்டி தும்முள்ள சந்தியிலுள்ள பௌத்த விகாரையில் இச்சத்தியாக்கிரகம் இடம் பெற்றது.

ஆரம்பத்தில் மக்கள் வீதியில் அமர்ந்து மறியல் செய்தபோது சுமார் ஒரு மணிநேரம் வாகனப்போக்குவரத்து தடைப்பட்டது.

பொலிஸார் வந்து எல்லோரையும் விகாரை வளவிற்குள் செல்லுமாறு கூறிய போது, கூட்டத்தினர் ''யாழ்ப்பாணம் போங்கோ'' என்று கூச்சல் போட்டனர்!

காலை 8 மணிக்கு ஆரம்பமான சத்தியாக்கிரகம் 10 மணிக்கு முடிவடைந்தது.

தியணைக்கும் படையினர் கண்ணீர்ப் புகைப்பிரிவினர், கலகம் அடக்கும் குண்டாந்தடிப் பிரிவினர் அவ்விடத்துக்கு வந்து உஷார் நிலையில் நின்றனர்

இரண்டுமணிநேரத்தின் பின்னர், அவர்கள் அமைதியாகக் கலைந்து விட்டனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி ..... இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389, 24126.